வெள்ளியம்பாளையத்தை பொருத்தமட்டில் 40 வருடங்களாக கிரசர் மற்றும் கற்குவாரி இயங்குகிறது. எங்களுக்கு எந்தவித இடைஞ்சலும் இல்லை. ஆனால் வெளியூரிலிருந்து வருபவர்கள் கிரசர் உரிமையாளர்களிடம் பணம் வாங்குவதற்காக கிரசர் வேண்டாம் என்று சொல்லலாம். நாங்கள் மூன்று தலைமுறைகளாக இருக்கிறோம். எங்களுக்கு இந்த பாறைகளால் எந்தவித பிரச்சனையும் இல்லை. இந்த வெள்ளியம்பாளையமே கிரசர் தொழிலை நம்பித் தான் உள்ளது. தற்சமயம் அனைவரும் கம்பெனிக்கு சென்றதால், மிஷின் வைத்து உடைக்கிறார்கள் இதனால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. மேலும் நான் ஆதார் அட்டை மற்றும் ரேசன் அட்டை கொடுக்கிறேன் எங்கள் ஊருக்கு எந்தவித பாதிப்பும் கிடையாது. இவர்களுக்கு அனுமதி கொடுப்பதில் எந்த தவறும் கிடையாது கண்டிப்பாக கொடுக்கலாம். மேலும் எங்களிடம் வீடு வசதி என அனைத்தும் உள்ளது எனவே எந்தவொரு பிரச்சைனையும் இல்லை. இந்த தொழில் செய்தால் தான் எல்லோரும் பிழைக்க முடியும். வெள்ளியம்பாளையத்தில் உள்ள அனைத்து கிரசர்களுக்கும் அனுமதி கொடுக்கலாம். இதனால் எந்த தொழிலுக்கும் பாதிப்பு இல்லை. இந்த குவாரி வருவது விரும்பாதவர்கள் வேண்டாம் என கூறலாம் ஆனால் அவர்கள் எங்கள் ஊரை சார்ந்தவர்கள் அல்ல. மொரட்டுப்பாளையத்தை விட வெள்ளியம்பாளையத்தில் தான் அதிக கிரசர்கள் உள்ளன. இதனால் எந்த பாதிப்பும் கிடையாது. ரேசன் அட்டை மற்றும் ஆதார் அட்டையுடன் 100 அல்ல 1000 கையெழுத்து வாங்கித் தருகிறேன். வெளியூர்காரர்கள் தான் இதனை தடைசெய்ய

கூறுகிறார்கள். உள்ளூர்காரர்களால் எந்தவித தடையும் இல்லை. நம்ட ் கொடுங்கள் எனத் தெரிவித்தார்.

4. பி. மகேந்திரன், மொரட்டுப்பாளையம்

கற்குவாரிக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என சொல்கிறார்கள். அதனால் நிறைய தொழில் பாதிக்கிறது. தொழில் பாதிப்பது மட்டுமல்ல, இங்கிருப்பர்கள் யாரும் அதிகமாக படிக்கவில்லை. ஆதி காலத்தில் இருந்தே இந்த வேலை தான் செய்கிறார்கள். கட்டுமானத் தொழில் பாதிக்கிறது. எலக்ட்ரீசியன் தொழில் பாதிக்கிறது. நான் எலக்ட்ரீசியன் வேலை தான் செய்து வருகிறேன் வேலைத் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது. கற்குவாரி இயங்குவதினால் எந்த பாதிப்பும் கிடையாது யாருக்கும் எந்தவித தொல்லையும் இல்லை. நாட்டில் நிறைய நடக்கின்றன அதனை எல்லாம் விட்டுவிட்டு, அத்தியாவசியமானதை வேண்டுமென்றே தடை செய்கிறார்கள் எனவே கற்குவாரி வேண்டும் எனக் கூறினார்.

5. திரு.எஸ்.என்.சக்தி கதிரவன், சேடர்பாளையம்.

பொதுவாக ஊத்துக்குளி என்றாலே வெண்ணைக்கு புகழ் பெற்றது. அதற்கு அடுத்த படியாக கற்குவாரி, சாமி சிலைகள், இடி கற்கள், தினசரி இட்லி சாப்பிடுகிறோம் என்றால் அதற்கு தேவையான கிரைண்டர் கற்களுக்கு புகழ் பெற்றது. இந்த பகுதியில் கருத்துக் கேட்புக் கூட்டம் வைத்ததை வரவேற்கிறோம். இந்தப் பகுதியில் உள்ளவர்களை கருத்துக் கேட்டால் தான், அதனால் என்ன பாதிப்பு என நாங்களே சொல்வோம். இந்த குவாரி என்பது, கனிம வளம் எங்கு இருக்கிறதோ அங்கே தான் அமைக்க முடியும். ஒரு தொழிற்சாலை எங்கு வேண்டுமானாலும் அமைக்கலாம் இடம் இருந்தால் போதும். இந்த குவாரி அமைவதனால் எங்கள் பகுதிக்கு பணப்புழக்கம் அதிகரிக்கும், பல்வேறு உபதொழில்கள், தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அதனால், அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, அனுமதி வழங்கலாம் எனக் கூறினார்.

6. திரு.ஆர். கணேசன், வெள்ளியம்பாளையம்

இந்த கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வந்திருக்கும் அனைவருக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, எனது ஊர் வெள்ளியம்பாளையம். அ. பெரிய பாளையம் ஊராட்சிக்கு உட்பட்டது. இந்த ஊராட்சிக்குட்பட்ட 9வது வார்டு, எனது மனைவி தொடர்ந்து 10 ஆண்டுகளாக ஊராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றி வருகிறார். மேலும், எனக்கு தெரிந்து 54 வருடமாக பாறைகளை கையில்தான் உடைத்து கொண்டு இருந்தார்கள். காலப்போக்கில் பரிணாம வளர்ச்சியினால் இயந்திர உதவியினால் கிரசர் வைக்கும் நிலையில் உள்ளது.

இதுவரைக்கும், எங்கள் ஊரில் இந்த தொழில் இருந்ததால் தான் எங்களை எல்லாம் கல் உடைத்தாவது படிக்க வைத்தார்கள். எந்த பிரச்சனையும் இல்லாமல் இருந்தது. பிரச்சனை என்று இருந்தால், நாங்கள் ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் போட்டு நிறுத்தியிருப்போம். அதனால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. இந்த குவாரிகள் எல்லாம் சட்டத்திற்குப்பட்டு 500 மீட்டர் அப்பால் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே எந்த பிரச்சனையும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, விண்ணப்பித்துள்ள மூன்று நபர்களுக்குமே நீங்கள் அனுமதி கொடுத்து, இந்த தொழில் சிறப்பாக நடைபெற உதவுமாறு இங்கே வந்திருக்கும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

**7. திரு.வி.ஆர்.பூபதி, வெள்ளியம்பாளையம்**

இப்பொழுது கூடியிருப்பது எதற்கென்றால், இங்கே புதியதாக தொழில் தொடங்க உரிமம் கேட்கவில்லை. ஆதி காலத்தில் இருந்து இருப்பவர்கள் தான்உரிமம் கேட்கிறார்கள். அதற்கு நாம் தான் ஆதரவு தெரிவிக்க வேண்டும். மேலும், வெள்ளியம்பாளையத்தில்தான் 15 கிரசர்கள் உள்ளன. இருக்கின்ற இளைஞர்களுக்கு ஓட்டுநர் உரிமம் எடுத்துக் கொடுத்ததில் இருந்து, கொரனா காலத்தில் ஊரடங்கில் இருந்த பொழுது கூட கற்குவாரி உரிமையாளர்கள் தான் எங்களுக்கு வந்து உதவி செய்தார்கள். உரிமையாளர், தொழிலாளர் என எந்த வேறுபாடும் இல்லாமல் கலந்து உதவி செய்து வருகின்றனர். 100 முதல் 200 நபர்கள் சேர்ந்து, இதுநாள் வரை எங்கள் ஊரில் சாலைமறியல் என்றோ, குப்பைப் பிரச்சனை என்றோ, மாசு தொடர்பான பிரச்சனை என எந்தவொரு பிரச்சனையும் நடந்தது இல்லை, எந்த பதிவேட்டிலும் கூட இருக்காது. அந்த அளவிற்கு ஊரோடு ஒற்றுமையாக இருக்கிறார்கள். ஓட்டுநர்களுக்கு ஓட்டுநர் உரிமம் கிரசர் மூலமாக எடுத்துத் தருகிறார்கள். அதனால் இந்த தொழிலை முடக்கக் கூடாது மென்மேலும் வளர்ச்சி அடைய வேண்டும். அவர்கள் புதியதாக ஒரு திட்டத்தினை தொடங்க அனுமதி கேட்கவில்லை இருக்கின்ற தொழிலை மேம்படுத்த தடையில்லாமல் அனுமதி கொடுக்குமாறு கேட்கிறார்கள். அதற்கு அரசாங்கம் முழு ஒத்துழைப்போடு நடத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் எனக் கூறினார்.

**8. திரு.வி.எம்.அண்ணாத்துரை, வெள்ளியம்பாளையம்**

இங்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தை கூட்டியதற்கு அரசாங்கத்திற்கும், கருத்துக் கேட்புக் கூட்டத்தை நடத்துபவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ஒரு பிரச்சனை என்றால் அந்த பகுதியில் இருக்கும் பொதுமக்களிடம் கருத்துக் கேட்பு கூட்டத்தை நடத்தி, பொதுமக்களுக்கு பாதிப்பா? என கேட்டு, இது போல் ஒவ்வொரு பகுதியிலும் நடத்த வேண்டும்.

மொரட்டுப்பாளையம் பஞ்சாயத்தில் நடப்பதை பார்க்கின்ற பொழுது, எங்களுக்கு மிகவும் பெருமையாக இருக்கின்றது. மேலும், 400 மீட்டரில் இருப்பது எனது வீடு தான். நான் ஐந்து முறை வார்டு உறுப்பினராக இருந்திருக்கிறேன். நான் தொடர்ந்து அ. பெரியபாளையத்தில் மக்கள் பணியாற்றி வருகிறேன். இந்த தொழில் நான் எனது 16 வயதில் இங்கு அமர்ந்திருப்பவர்களின் அப்பா காலத்தில் வேலை செய்தேன் அப்பொழுது எனக்கு சம்பளம் 5 ரூபாய். இன்று மாசுக்கட்டுப்பாடு என்று சொல்கிறீர்கள். அன்றைய பொழுது கல்லை உள்ளே போட்டால் 4 சல்லடையில், 1 3/4, 1/2, 1/4, மற்றும் பவுடர் வெளியே வரும் அந்த பவுடர் அள்ளப் போவேன். காலையில் 6 மணிக்கு மின்சாரம் இருக்காது. இரவு 10 மணிக்குத் தான் வரும். நான் உள்ளே போகும் பொழுது அடையாளம் தெரியும் வெளியே வரும் போது அடையாளம் தெரியாமல் வெள்ளையாக இருப்பேன். மூக்கில் பவுடர் கட்டியாக இருக்கும். இந்த தொழிலால் என்ன பாதிப்பு என்று இங்கு இருப்பவர்களுக்குத் தான் தெரியும். எங்கேயோ இருந்து கொண்டு ரூபாய் 500 மற்றும் 1000 பணத்திற்காக அழைத்து வரப்பட்டு இருக்கிறார்கள் இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்படுகிறது.

கோவிந்தம்பாளையத்தில் 3000 குடும்பங்கள் பரம்பரையாக அம்மிக்கல், ஆட்டுக்கல் மற்றும் கல் உடைப்பதை கைத்தொழிலாக செய்து வருகிறார்கள். அதுபோல சப்பட்ட நாய்க்கன் பாளையத்தில் 1000 குடும்பங்கள் சிலை வடிக்கிறார்கள். எங்கள் ஊர் வெள்ளியம்பாளையம், அ.பெரியபாளையம் பஞ்சாயத்திலிருந்து 3 கோடி ரூபாய் வருவாய் அவர்கள் பஞ்சாயத்திற்கு தான் போகிறது. 400 மீட்டரில் நான் தான் குடியிருக்கின்றேன். கோவிந்தசாமி 300 மீட்டரில் வீடு கட்டிக் கொண்டிருக்கிறார். வெடி வைத்து தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தோம் என்று சொன்னால் அந்தக் காலத்திலேயே கிரசர் நிறுத்தப்பட்டிருக்கும். ஏழைகள் தொழில் வளர வேண்டும் அனைவரும் சந்தோசமாக இருக்க வேண்டும் என்றால் ஒரு இழப்பும் இருக்கலாம், ஆதனால் பாதிப்பு ஏதும் இல்லை. இதை நம்பி இன்று பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்கின்றது. அதைப் பார்க்கின்ற பொழுது பெருமையாக இருக்கிறது. என்னுடைய தொழில் கேபிள் ஆபரேட்டர். நான் தினமும் ஒவ்வொரு குடும்பங்களையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றேன் சாப்பாடு இருக்கிறதா? இல்லையா? எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்து இருக்கிறார்கள். ஏழை இன்னும் ஏழையாகத் தான் இருக்கிறார்கள், நாங்கள் இன்னும் காரில் செல்லவில்லை, அண்ணமார் ஹோட்டலில் சாப்பிடுவதில்லை. தள்ளுவண்டி கடையில் இட்லிரூ. 5/-க்கு வடை ரூ. 3/-க்கு விற்பனை செய்கிறார்கள் இன்னும் எங்கள் குழந்தைகள் அதைத்தான் வாங்கி சாப்பிடுகிறார்கள். இன்றைக்கு நாங்கள் ரூபாய் 700 லிருந்து 800 வரை தான் சம்பளம் வாங்குகிறோம் அரசாங்கம் எங்களுக்கு ரூபாய் 1000/-ம், 2000/-ம்

கொடுப்பதில்லை. இதை நம்பி ஒரு ஊர் மட்டுமல்ல, சப்பட்ட நாயக்கன் பாளையம், திம்மநாயக்கன் பாளையம், வெள்ளியம்பாளையம், கோவிந்தம்பாளையம், மொரட்டுப்பாளையம் இந்த பகுதியே இதை நம்பித் தான் இருக்கின்றது. கட்டுமானத்தொழில், கட்டிடத் தொழில் ஜல்லி இல்லாமல் எப்படிக் கட்ட முடியும்? இப்பொழுது எம்.சாண்ட் வந்து விட்டது மணல் இல்லை. எத்தனையோ வீடுகளைப் போய் பார்த்தால் விரிசல் விட்டு கிடக்கிறது கட்டி இரண்டு வருடம் கூட ஆகவில்லை. ஒவ்வொரு தொழில்களிலும் எவரோ ஒருவர் வருகின்றார் ஏதோ ஒரு கடிதம் கொடுத்துவிட்டு போய் விடுகிறார், நடுவில் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்களா? இல்லையா என மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்துங்கள். நீங்கள் எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள்? உங்களது முகவரி என்ன? இதனால் உங்களுக்கு என்ன பாதிப்பு? அதை முதலில் சொல்லுங்கள் என கேட்க வேண்டும். மீண்டும் புகார் எழுந்தால், அவர்கள் வீட்டிற்கும் குவாரிக்கும் எவ்வளவு தூரம் எனப் பார்க்க வேண்டும். இந்த தொழிலால் தான் பல குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அனைவரும் வாழ வேண்டும். அதிகாரிகள் ஏழை எளியவர்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள். இந்த தொழில் இப்பொழுது வந்ததல்ல எனக்கு தெரிந்து 40 ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. இது போன்று நீங்கள் அனுமதி கொடுக்கின்ற பொழுது, அந்தந்த பகுதிகளில் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்துங்கள். நான் நினைத்திருந்தால் 1000 பேர் வந்திருப்பார்கள் எதிர்ப்பு இருந்தால் தான் வர வேண்டும். எதிர்ப்பு இல்லாத போது எதற்கு அழைத்து வர வேண்டும் எனக் கூறினார்.

9. **திரு.க.கோவிந்தசாமி, வெள்ளியம்பாளையம்.**

இந்த பகுதியில் சேடர்பாளையம், நல்லகட்டிபாளையம், கோவிந்தம்பாளையம், மொரட்டுப்பாளையம் வெள்ளியம்பாளையம், சப்பட்ட நாயக்கன் பாளையம் மற்றும் திம்மநாயக்கன் பாளையம் ஆகிய அனைத்து ஊர்களிலும் கல்லுடைப்புத் தொழில் என்பது 100 ஆண்டுகளுக்கு மேலாக நடந்து கொண்டிருக்கிறது என அனைவரும் கூறி நாங்கள் கேள்விப் பட்டிருக்கிறோம். அந்த கல்லுடைக்கும் கைத்தொழில் ஆட்டுக்கல், அம்மிக்கல் என செய்து எல்லா மாவட்டங்களிலும் விற்பனை செய்து வந்தார்கள். அது நடந்து கொண்டிருக்கும் போது தான், சில பேர் இந்த கல்லுடைப்பை கொஞ்சம் விரிவுபடுத்தி, பொதுமக்களுக்கு வீடு கட்டும் கட்டுமான பொருட்களை செய்து கொடுக்கலாம் என்று, அவர்களுடைய இடத்திலும், அரசினுடைய இடத்திலும் அனுமதி கேட்டு நமது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகி கிட்டத்தட்ட ஒரு 30 ஆண்டுகளுக்கு மேலாக இ;ந்த தொழிலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு அனுமதி கொடுக்கும் போது நீங்கள் ஒரு குவாரி மற்றும் கிரசர் அமைப்;பதற்கு என்னென்ன விதிகள் இருக்கின்றதோ அது அத்தனையையும்

ஏற்றுக் கொண்டு, அனுமதி பெற்று செய்து வருகிறார்கள். எனவே மக்க அனைவருக்கும் கட்டுமானப் பொருட்கள் கிடைக்கவும் இந்த தொழில் நடப்பதற்கும் அரசு விதிகளின்படி அனுமதி பெற்று இதுவரைக்கும் தொழில் செய்து கொண்டிருந்தார்கள். மேலும் அனுமதி கோரிய மூன்று குவாரிகளும் இந்தத் தொழிலை பொதுமக்கள் அனைவருக்கும் எந்தவொரு பாதிப்பும் இல்லாமல் அரசுவிதிகளின்படி இயக்க அவர்களுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

**10. திரு.வி.எம்.கருப்பசாமி, வெள்ளியம்பாளையம்.**

இந்த மூன்று கற்குவாரிகளும் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்தது. அதனால் தாராளமாக அனுமதி வழங்கலாம் என்று கேட்டுக் கொள்கிறோம். இதனால் வெள்ளியம்பாளையம் ஊர் பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்பதை தெரிவித்துக் கொண்டார்.

**11. திரு.பாரதி, மொரட்டுப்பாளையம்**

எனது சொந்த ஊர் மொரட்டுப்பாளையம். தற்போது சென்னிமலையில் வசித்துக் கொண்டிருக்கிறேன். புல எண்.209/1ஏ, 1பி மற்றும் 209/2 அமையவிருக்கின்ற குவாரி கனிம சலுகை விதிகள் அடிப்படையில் சட்டத்திற்கு புறம்பாக 300 மீட்டர் சுற்றளவில் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் உள்ளது மற்றும் அரசு சொத்துக்கு 10 மீட்டர் இடைவெளி இல்லாமல் இருக்கிறது. ஓடைக்கு 50 மீட்டர் இடைவெளி இல்லாமல் இருப்பது என்ற அடிப்படையில், குவாரிப் புலத்தைச் சுற்றி 300 மீட்டர் சுற்றளவில் குறிப்பாக புலத்தின் தென்கிழக்குப்புறத்தில் 107 மீட்டரில் புல எண்.392-ல் ஒரு வீடு உள்ளது இது வருவாய் துறை ஆவணத்தில் இருக்கிறது. அதே போல் புல வரைபடத்திலும் இருக்கிறது. குவாரி அமையவிருக்கின்ற புலத்திற்கு மேற்கே 290 மீட்டரில் புல எண்.203-ல் ஒரு வீடு இருக்கிறதுஇதுவும் வருவாய்த்துறை ஆவணத்தில் இருக்கிறது. அதே போல் புலத்தின் வடக்குப் புறத்திலும் புல எண். 208-ல் 98 மீட்டரில் ஒரு வீடு இருக்கின்றது இதுவும் ஆவணத்தில் இருக்கிறது. குவாரி அமையும் வடக்குப் புறத்தில் புல எண். 211-ல் 290-வது மீட்டரில் வீட்டுமனைகள் மற்றும் வீடுகள் உள்ளன இதுவும் வரைபடத்தில் இருக்கின்றது.

அதே போல் புல எண்.381-ல் 295-வது மீட்டரில் வீடு இருக்கின்றது. குவாரி அமைகின்ற இடத்திற்கு மேற்குப் புறம் குவாரிப் புலத்தை ஒட்டியே ஓடை இருக்கிறது. புல எண்.208 லிருந்து புல எண். 206 மற்றும் 203 வழியாக ஓடை செல்கிறது. இது கிராம வரைபடம் மற்றும் புல வரைபடத்தில் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. 50 மீட்டர் இடைவெளி இல்லாமல் அந்த ஓடை இருக்கிறது.

மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி, குடிநீர் தொட்டி, ஆழ்துழாய் கிணறு ஆகியன 500 மீட்டர் விட்டுத் தான் இருக்க வேண்டும் ஆனால் இது ஒட்டியே இருக்கிறது. இது சிறு கனிம சலுகை விதிகள் 1959 விதி 36/1–ன் படி இது தவறாக இருக்கிறது எனவே, இதன் அடிப்படையில், சட்ட விதிகளின்படி இக்குவாரிகளுக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என கேட்டுக் கொண்டார்.

**12. திரு.சதீஸ், சென்னிமலை**

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டம், மொரட்டுப்பாளையம் கிராமம், புல எண். 382/2ஏ, பி, கற்குவாரியில் சைட்டிங் கிரிட்டீரியா எனப்படும் அரசு விதிகள் மீறப்பட்டுள்ளதால் அதற்கு அனுமதி தரக்கூடாது எனக் கூறினார். மேலும், குவாரி அமையவிருக்கும் புலத்தின் தெற்குப் புலத்தில் ஒன்றாவது மீட்டரில் புல எண்.392ல் ஒரு வீடு உள்ளது. இது வருவாய்த் துறை ஆவணங்கள், கிராம வரைபடம் மற்றும்புல வரைபடம் (FMB) ஆகியவற்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. குவாரி அமையவிருக்கும் புலத்தின் தென்மேற்கு புலத்தில் 290–வது மீட்டரில் புல எண்.208–ல் ஒரு வீடு உள்ளது. குவாரி அமையும் புலத்தின் வடக்குப் பகுதியில் புல எண்.211–ல் 290–வது மீட்டரில் வீடு உள்ளது இது கணினி புல வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. வடக்குப் புறத்தில் புல எண்.381–ல் 295–வது மீட்டரில் வீடு உள்ளது. எனவே, அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், வீட்டு மனைகள், கட்டுமானங்கள் ஆகியவற்றிலிருந்து சுமார் 300 மீட்டர் இடைவெளி விட்டே கற்குவாரி செயல்பட வேண்டும் என அரசு விதிகள் தெளிவாக தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் 1959–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. பல்வேறு நீதிமன்ற உத்தரவுகள் இருந்தும் சுமார்300 மீட்டர் சுற்றளவிற்குள் பல்வேறு அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் இருந்தும் அதை காட்டாமல் மறைத்தும், பொய்யான சான்றுகளுடன் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. கற்குவாரிப் புலத்திற்கு 300 மீட்டர் சுற்றளவிற்குள் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் அனைத்தும் அரசின் ஆவணங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது அரசின் ஆவணங்களான யூ.டி.ஆர். 1979 முதல் 1985 காலத்தியகிராம வரைபடம், புல வரைபடம் ஆகியவற்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும், சட்டத்திற்குப் புறம்பாக வீட்டில் குடியிருக்கவில்லை, வீடு தற்போது இடிந்து விட்டது, சேதாரம் அடைந்துள்ளது எனவும், குடியிருப்பவர் எனக்கு கற்குவாரி இயங்குவதில் ஆட்சேபணை இல்லை என தெரிவித்துள்ளார் எனவும் கூறி சட்டத்தில் எங்கும் கூறியில்லாதபடி தவறுதலாக அறிக்கை வழங்கி வருகின்றனர். ஆனால் சிறுகனிம சலுகை விதிகள் 1959–ன் சட்டப்படி ஆவணங்களில் சுட்டி காட்டப்பட்டு இருந்தாலும், வீடு சிதலமடைந்து இருந்தாலும், சேதாரம் அடைந்து இருந்தாலும், அது வீடு மற்றும் வீட்டு மனை தான் என தெளிவாக கூறப்பட்டுள்ளது.

கற்குவாரி அமையும் புலத்திலிருந்து 300 மீட்டர் தூரத்திற்குள் வீடுகள் எதுவு இருக்கக்கூடாது என்று சட்டம் இருக்கும் நிலையில் இங்கு பல அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் உள்ளது. எனவே, கற்குவாரி சட்டப்படி இயங்க முடியாது, இயங்கக் கூடாது. கற்குவாரியைச் சுற்றி பல புலங்களில் 300 மீட்டர் சுற்றளவில் தொழிலாளர் தங்கும் தற்காலிக வீடுகள் உள்ளன. இதனைத் தவிர கற்குவாரி அமையும் புலத்தைச் சுற்றி 300 மீட்டர் சுற்றளவில் பல நிரந்தர தற்காலிக வீடுகள் உள்ளன. எனவே, அரசு கிரிட்டீரியா விதிகள் மீறப்பட்டுள்ளதால் இந்த கற்குவாரிகளுக்கு அனுமதி வழங்கக் கூடாது எனக் கூறினார்.

**13. திரு.என்.பிரபு, ஊராட்சி மன்றத் தலைவர், மொரட்டுப்பாளையம்;**

மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அவர்களையும், மொரட்டுப்பாளையம் ஊராட்சி தலைவர் வரவேற்றார். கிராமங்கள் வளர்ச்சி அடைந்தால் தான் நாடு வளர்ச்சி அடையும் என்று மகாத்மா அன்றே கூறினார். மேலும், மொரட்டுப்பாளையம் ஊராட்சியை பொறுத்தவரையில் கிராமம் வளர்ச்சி அடைய வேண்டும் என்று சொன்னால் அதற்கு நிதி வேண்டும். மொரட்டுப்பாளையம் ஊராட்சியை பொறுத்தவரைக்கும் கடந்த 20, 25 ஆண்டுகாலமாக கனிமம் மற்றும் சுரங்க நிதியின் மூலமாக ஏகப்பட்ட நலத்திட்டங்கள்செய்து கொண்டு வருவதாக கூறினார். அந்த கனிமம் சுரங்கம் நிதி இல்லையென்றால் பஞ்சாயத்தில் உடைகின்ற பைப்பைக் கூட சரிசெய்ய முடியாது எனவும் கூறினார். கடந்த 6 மாதத்தில் ஜூன் வரைக்கும் 1 கோடியே 8 லட்சம் நிதியாக பஞ்சாயத்திற்கு வந்துள்ளது. அதற்கு முன்னால் ஆறு மாதத்திற்கு 1 கோடியே 18 லட்சம் நிதியாக வந்தது. இந்த மாதிரி ஒவ்வொரு ஆண்டும் 1 கோடி முதல் 1½ கோடி வரை நிதியாக வந்துக் கொண்டு இருக்கிறது. இந்த நான்கு ஆண்டுகளில் கிட்டத்தட்ட 4 கோடிக்கு வளர்ச்சித் திட்டப் பணிகள் செய்திருக்கிறோம். செம்பாவள்ளம் பகுதியில் சமுதாய நலக் கூடத்திற்கு உணவருந்தும் கூடம் 20 லட்சத்திற்கும், பகுதிநேர ரேசன் கடை 10 லட்சத்திற்கும் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அது போல திம்மநாயக்கன்பாளையத்தில் ஒரு அங்கன்வாடி 10 லட்சம் மதிப்பீட்டில் கட்டிக் கொடுத்திருக்கிறோம். மொரட்டுப்பாளையத்தில் அங்கப்பா நகரில் ஒரு அங்கன்வாடி 10 லட்சம் மதிப்பீட்டிலும், காவேரி நகரில் 10 லட்சம் மதிப்பீட்டில் ஒரு அங்கன்வாடியும் கட்டிக் கொடுத்திருக்கிறோம். தற்பொழுது, சப்பட்ட நாயக்கன் பாளையத்தில் ஒரு சமுதாய நலக் கூடம் 48 லட்சத்தில் கட்டிக் கொண்டு இருப்பதாகவும், 75 சதவீதம் வேலை முடிந்து விட்டது. அது கூடிய விரைவில் திறப்பு விழா செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடப் போவதாகவும் தெரிவித்தார். அது போல், மொரட்டுப்பாளையம் ஊராட்சியில் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு இருந்தது எனவும் தான் ஊராட்சி

தலைவராக பொறுப்பேற்ற 41/2 வருடங்களில் கனிமம் மற்றும் சுரங்க நிதியிலிருந்து 25 போர்வெல் மின் மோட்டருடன் அமைத்திருப்பதாக கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது, ஏறக்குறைய 70 சின்டெக்ஸ் கருப்பு டேங்குகள் அமைத்துள்ளோம் அதுவும் கனிமம் மற்றும் சுரங்கம் நிதியிலிருந்து தான் செய்திருக்கிறோம். சிவசக்தி நகரில் 10 லட்சம் ரூபாயிலும், மொரட்டுப்பாளையம் காவேரி நகரில் 10 லட்சம் ரூபாயிலும் நீர்த்தேக்க தொட்டி அமைத்திருக்கிறோம்;. அடுத்து தொட்டியவலவில் இணைப்பு சாலை இல்லாமல் இருந்தது எனவே ஒரு சிமெண்ட் ரோடு 10 முதல் 20 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைத்துள்ளோம். சப்பட்டநாயக்கன் பாளையத்தில் ஊர்களிலிருந்து நீண்ட நாட்களாக கழிவு நீர் வெளியேராமல் கழிவுநீர் பிரச்சனை இருந்தது. அதுவும் சுமார் 38 லட்சம் மதிப்பீட்டில் கனிமம் மற்றும் சுரங்கம் நிதியிலிருந்து தான் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி நடந்து கொண்டிருக்கிறது.

கனிம நிதி இல்லையென்றால் மொரட்டுப்பாளையம் பஞ்சாயத்தில் எந்தவொரு வேலையுமே செய்யமுடியாத நிலை இருக்கிறது. அதை மனதில் கொண்டு இந்த மூன்று குவாரிகளுக்கும் அனுமதி வழங்க வேண்டும் என இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டார்.

மேலும், உரிமம் கொடுப்பதற்கு முன்னால் பள்ளிகளுக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் உத்தரவு போடுகிறார். அதனால் மொரட்டுப்பாளையம் நிறைய பயனடைகிறது. உதாரணத்திற்கு, மொரட்டுப்பாளையம் மேல்நிலைப்பள்ளியில் இதுவரைக்கும் கலையரங்கம் இல்லாமல் வெயிலில் நிகழ்ச்சிகள் நடத்திக் கொண்டு வந்துள்ளனர்.அந்த பள்ளிக்கு 13 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் ரேசன் கிரசர் உரிமையாளர் மரியாதைக்குரிய திரு.குமரேசன் அவர்கள் கலையரங்கம் கட்டிக் கொடுத்துள்ளார். அதே போல் திம்மநாயக்கன்பாளையம் நடுநிலைப்பள்ளிக்கு சிவசக்தி கிரசர் உரிமையாளர் திரு. ராஜசேகர் அவர்கள் 3 லட்ச ரூபாய் செலவில் சுற்றுச்சுவரும், மேடையும் அமைத்துக் கொடுத்துள்ளார். அதே போல் மொரட்டுப்பாளையம் உயர்நிலைப் பள்ளிக்கு அம்மன் கிரசர் உரிமையாளர் திரு. பழனிச்சாமி அவர்கள் 4 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பெண்கள் கழிப்பறை அமைத்துக் கொடுத்துள்ளார். அது மட்டுமல்லாமல் காலை உணவுத் திட்டத்திற்கு நிதி இல்லை, உணவுப் பொருட்கள் வாங்குவதற்கு பற்றாக்குறை என்று கூறியவுடன் அதற்காக 50 ஆயிரம் ரூபாய் பள்ளி தலைமை ஆசிரியரிடம் கொடுத்துள்ளார். இதெல்லாம் இந்த தொழில் இயங்குவதால் மட்டுமே செய்ய முடிகிறது. அதுமட்டுமல்ல, இந்த பணிகளை அவர்கள் உடனிருந்தே முடித்துக் கொடுக்கின்றனர்.

அதே போல் மொரட்டுப்பாளையம் மேல்நிலைப் பள்ளிக்கு பாக்கியலட்சுமி கிரசர் உரிமையாளர் 3 லட்சம் மதிப்பீட்டில் பெண்கள் கழிப்பிடம் கட்டிக் கொடுத்துள்ளார்கள். அது மட்டுமல்லாமல் கணினி வாங்க 50 ஆயிரம் ரூபாய் கொடுத்துள்ளார்கள். அதே போல பேபி கிரசர் உரிமையாளர் திருமதி.தங்கமணி அவர்கள் மொரட்டுப்பாளையம் மேல்நிலைப் பள்ளிக்கு கணினி வாங்க 50 ஆயிரம் ரூபாய் கொடுத்துள்ளார்கள். அதே போன்று பண்ணாரி கிரசர் உரிமையாளர் திரு.தங்கராஜ் அவர்கள் கணினி இருக்கும் அறைக்கு கிறில் அமைத்து பாதுகாப்பு செய்து கொள்ள சுமார் 2 லட்சம் ரொக்கமாகவும், 50 ஆயிரத்திற்கு ஆட்களை வைத்து வேலையும் செய்து கொடுத்துள்ளார். திம்மநாயக்கன் பாளையம் நடுநிலைப் பள்ளிக்கு அம்மன் கிரசர் உரிமையாளர் திரு.தர்மசீலன் அவர்கள் மேற்கூரை இல்லாமல் இருந்ததற்கு ரூ.1 லட்சம் மதிப்பீட்டில் மேற்கூரை அமைத்துக் கொடுத்துள்ளார்கள். மேலும், பள்ளியில் மழை பெய்தால் மழை நீர் தேங்கி இருந்ததால் சுமார் ரூபாய் 2 லட்சம் மதிப்பீட்டில் 15 லோடு கிராவல் மண் ஓட்டிக் கொடுத்துள்ளார்.

நமது பள்ளிக்கூடத்திற்கு அரசு என்னதான் திட்டங்கள் போட்டாலும், காலை உணவுத் திட்டம், மதிய உணவுத் திட்டம், கணினி, குழந்தைகளுக்கு ஆடைகள், மிதிவண்டி ஆகியவை கொடுத்தாலும், நம் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் தான் இருக்கிறது. மாணவர்கள் படிப்பதற்கு உண்டான சூழ்நிலை உருவாக்க வேண்டும் என்றால், இன்றைக்கு தனியார் பள்ளிக்கு நிகராக அனைத்தும் கேட்கிறார்கள். இவை எல்லாம் இருந்தால் மட்டுமே படிக்கின்ற சூழ்நிலை உருவாக்க முடியும். படித்து விட்டார்கள் என்றாலே அவர்கள் குடும்ப சூழ்நிலை நல்ல நிலையை அடைந்துவிடும்.

அதற்கு நமது கிரசர் உரிமையாளர்கள் பாகுபாடு எதுவும் பார்க்காமல், எது கேட்டாலும் உடனுக்குடன் செய்து கொடுக்கிறார்கள், இதெல்லாம் கிரசர் தொழில் ஓடுவதால் மட்டுமே சாத்தியம். இதை நீங்கள் மனதில் ஏற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்துக் கொண்டார்.

மேலும், எங்கள் பகுதியில் இருக்கின்ற கோயில்களுக்கு, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு ஏதாவது பிரச்சனை, மருத்துவச் செலவு, மிகவும் சாப்பிடுவதற்கே வழியில்லாமல் இருக்கிறவர்களுக்குக் கூட உணவுப் பொருட்கள் வாங்கி தருகிறார்கள். கோயில்களுக்கெல்லாம் நிதி உதவி தருகிறார்கள். அதை எல்லாம் இந்த நேரத்தில் சொல்வதற்கு கடமைப் பட்டிருக்கின்றேன் எனக் கூறினார். நாம் சொன்னால் பாகுபாடு இல்லாமல் செய்து தருகிறார்கள். இதெல்லாம் கிரசர் தொழில் ஓடுவதால் மட்டுமே என தெரிவித்துக்

கொண்டு, இந்த கிரசர் எல்லாமே இப்ப புதியதாக எதுவும் துவங்கவில்லை காலங்காலமாக நடந்து கொண்டு வருகிறது. மொரட்டுப்பாளையம் என்றாலே ஜல்லிக்கு பிரபலமானது இதனால் யாருக்கும் எந்த இடையூறும் வராது. இக்கற்குவாரிகளால் 2000–3000 தொழிலாளர்கள் பஞ்சாயத்திற்குள் வருகிறார்கள். இதனால் பக்கத்தில் உள்ள பேக்கரிகள், மளிகை கடைகள், சந்தை இதெல்லாமே முன்னேறுகிறது. திரு.அண்ணாத்துரை அவர்கள் கூறியது போல் கோவிந்தம் பாளையத்தில் கற்குவாரி நிறுத்தி விட்டார்கள். அதனால், அந்த நேரத்தில் சந்தை கூட நடத்த முடியாத சூழ்நிலை. சுங்கம் கூட எடுப்பதற்கு ஆள் இல்லை, பணம் கட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலையிட்டு, அதற்கு இப்பொழுது அனுமதி கொடுக்கப்பட்டு, சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஊர் வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் மனதில் வைத்துக் கொண்டு, இந்த கற்குவாரிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும் எனக் கூறினார்.

மேலும், 300 மீட்டருக்குள் வீடு இருக்கிறது என்று தற்பொழுது கூறுகிறார்கள். ஆனால், நான் பதவி ஏற்று 4 ½ ஆண்டுகள் ஆகிறது. அப்படி 300 மீட்டருக்குள் வீடு இருக்கும் போது எந்த அனுமதியும் கொடுத்ததில்லை. அவர்களே யாரிடமும் சொல்லாமல் வீடு கட்டிக் கொண்டு பின் அனுமதிக்கு வருகிறார்கள். சட்டம் என்ன சொல்கிறது என்றால், பாறை முதலில் உடைக்கிறார்களா? குடியிருப்பு முதலில் அமைக்கிறார்களா? அப்படி என்று தான் பார்க்கச் சொல்கிறது. அதனடிப்படையில் நாங்கள் யாருக்கும் அனுமதி கொடுப்பதில்லை. அப்படியே ஒன்றிரண்டு வீடுகள் இருந்தாலும், அது அனுமதி இல்லாமல் தான் இருக்குமே தவிர அனுமதியுடன் எந்த வீடும் இருப்பதில்லை. அதையும் நீங்கள் மனதில் வைத்துக் கொண்டு, இந்த குவாரி உரிமையாளர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் எனக் கூறினார்.

**14. திரு.எம்.எஸ்.கருப்புசாமி, மொரட்டுப்பாளையம்.**

இந்த கற்குவாரித் தொழிலால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பயன் அடைகிறார்கள். எனவே, இந்த கற்குவாரித் தொழிலுக்கு அனுமதி வழங்குவதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை எனத் தெரிவித்துக் கொண்டார்.

**15. திரு. ராஜா, திம்மநாயக்கன்பாளையம்;.**

நான்கு ஆண்டுகளாக எம்.எஸ்.ஆர்.நகர், திம்மநாய்க்கன்பாளையம் பகுதியில் வசித்து வருகிறேன். இந்தப் பகுதியில் வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்வதை தலைவரிடம் கேட்டேன். இந்த நான்கு வருடங்களில் சாலை மற்றும் தண்ணீர் வசதி

என அனைத்தும் செய்து கொடுத்திருக்கிறார்கள். இதற்கு வருவாய் எப்படி வருகிறது என கேட்டேன். அதற்கு அவர், கற்குவாரியினால் தான் நிதி வருகிறது என்றும் மொரட்டுப்பாளையம் பஞ்சாயத்திற்கு வேலைகள் நடக்கிறது என்றும் கூறினார். அதே போல், வருவாய் மற்றும் வேலை வாய்ப்பு, இந்த பகுதியில் நன்றாக இருப்பதால் இந்த கற்குவாரிகளுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

**16. திரு.குமரேசன், ஊத்துக்குளி, தலைவர் குவாரி மற்றும் கிரசர் அசோசியேசன்**

மாவட்ட வருவாய் அலுவலரையும், மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அலுவலரையும், அரசு அதிகாரிகளையும் வரவேற்றார். கிரசரால் வருவாய் மற்றும் பயன் பற்றி நிறைய பேர் பேசிவிட்டார்கள் சுற்றுச்சூழல் பற்றி மட்டும் சிலவற்றை சொல்கிறேன் எனத்தெரிவித்தார்.

இந்த துறையை பொறுத்தவரை டெக்ஸ்டைல் துறை மாதிரி மைக்ரோபைபர்ஸ் என்ற நுண்ணியமான தூசுகள் எல்லாம் வருவதில்லை. இந்தகல்லுடைப்பு தொழில் சுதந்திர காலத்திற்கு முன்பிருந்தே இருக்கிறது. தண்டவாளம் போடுவதற்கு அந்த காலத்திலேயே ரயில்வே துறைக்கு கல் விநியோகம் செய்து கொடுத்திருக்கிறோம். இதனால், காசநோயோ, புற்றுநோயோ வந்ததில்லை. இந்த தொழில் ஆரஞ்ச் வகைப்பாட்டில் உள்ளதால் இதில் மாசு ஏற்படுவதில்லை. மாசு என்பது தொல்லைதானே தவிர உடல் நலனை பாதிப்பதற்கான வாய்ப்பு குறைவு தான். உற்பத்தி செய்த பிறகு எஞ்சிய கழிவுகளை அழிப்பதற்கு சிரமப்படும் தொழில்கள் நிறைய இருக்கின்றன. இது மாதிரி இத்தொழிலில் கிடையாது. மேலும் இரசாயண செயல்முறை என்பதும் கிடையாது. இந்தத் தொழிலைப் பொறுத்தவரை பஞ்சாயத்திற்கு எவ்வளவு வருவாய் கிடைக்கிறது என்று எல்லோருக்குமே தெரியும். மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தி இருக்கிறது எனக் கூறினார்.

மேலும், இத்தொழில் விவசாயத்திற்கு சமமான தொழிலாகும். நம் மாநிலத்திலிருந்து மூலப்பொருட்கள் ஜல்லியாகவோ, கான்கிரீட்டாகவோ வெளியே செல்கிறது. இந்த தொழிலை அரசே நிறுத்த முயற்சித்தாலும் அவர்களுக்குத்தான் சிரமம். கர்நாடகா, கேரளா, ஆந்திரா, கோவா அங்கிருந்தெல்லாம் கட்டுமானப் பொருட்கள் நமக்கு எப்பொழுதும் வரப்போவதில்லை. இப்போது நாம் இருக்கும் மண்டபமும், வந்த ரோடும், குடியிருக்கும் வீடும், நம் குவாரி ஓடினால் மட்டுமே இதை செய்ய முடியும். ஒரு மருத்துவமனை, விமானநிலையம் மற்றும் இரயில் நிலையம் அமைப்பதாக இருந்தாலும்,, அடிப்படையாக நாம் இத்தொழிலை செய்து தான் ஆக வேண்டும். ஆனால் நாம் இந்தத் தொழிலை அரசு சொல்லும் விதிப்படி கடைபிடித்து நடப்போம். இதுவரைக்கும் பல விதிகள் 1977–லிருந்து இன்றளவும் மாற்றம் வந்து

கொண்டே இருக்கிறது. இந்த மாற்றத்திற்கு தகுந்தாற் போல் நாமும் மாறிக் கொண்டே இருக்கிறோம் எனக்கூறினார்.

மேலும் நீங்கள் என்ன விதியினை கடைபிடிக்கச் சொல்கிறீர்களோ அதை கடைபிடித்து, மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாமலும், இத்தொழிலை நடத்திருகிறோம் என உத்தரவாதம் தருவதாகவும், அவர்களுக்கு உரிமம் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

**17. முகிலன், ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம், சென்னிமலை**

திருப்பூர் மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், திருப்பூர் வடக்கும் இணைந்த நடத்துகின்ற மொரட்டுப்பாளையம் கிராமத்தில், ரேவதி, பிரபாகரன், ராஜசேகர் ஆகிய மூன்று கற்குவாரி அமைப்பதற்கான கருத்துக் கேட்புக் கூட்டத்தின் தலைவர் நமது மாவட்டத்திற்கு புதிதாக பதவியேற்றுள்ள மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும். அதே போல் இதை முன்னிலை வகித்து நடத்திக் கொண்டுள்ள திருப்பூர் வடக்கு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய மதிப்புமிகு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் மற்றும் இங்கு பங்கெடுத்துக் கொண்டுள்ள பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களுக்கும், பத்திரிக்கையாளர்களுக்கும் சமூக அக்கறை உள்ளவர்களுக்கும், உழவர்களுக்கும், பொதுமக்களுக்கும், கற்குவாரி உரிமையாளர்களுக்கும், கற்குவாரி உரிமையாளர்களால் அழைத்து வரப்பட்டவர்களுக்கும் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் வணக்கத்தினையும் தெரிவித்துக் கொண்டார்.

நான் தமிழ்நாடு சுற்றுச் சூழல் பாதுகாப்பு இயக்கத்தினுடைய ஒருங்கிணைப்பாளராக இருக்கிறேன். ஏற்கனவே, கிரானைட் முறைகேடு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றமும், டெல்லி உச்சநீதிமன்றமும் அமைத்த மரியாதைக்குரிய திரு. உ.சகாயம், ஐ.ஏ.எஸ். அவர்களுடைய குழுவில் உடனிருந்து ஓராண்டு காலம் கிரானைட் முறைகேடுகளைப் பற்றி மதுரை மாவட்டத்தில் வெளிக் கொண்டு வந்ததுடன், தொடர்ந்து இந்த மண்ணையும், மக்களையும், பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறையோடு செயல்பட்டு வருகிறவன். நான் தற்போது கரூரில் இருக்கின்றேன். இந்த கருத்துக் கேட்புக் கூட்டம் தொடங்குவதற்கு முன்பாகவே, விதிப்படி அமைக்கப்படாத சுரங்கங்களால், கற்குவாரிகளால் ஏற்கனவே 2010ல் ஒன்றிய அரசு அமைத்த மாதவ் காட்கில் கூறிய வழிகாட்டுதல்களை பின்பற்றாமல் இன்று ஆயிரக்கணக்கான மக்கள் வயநாடு நிலச்சரிவில் இறந்துள்ளார்கள். அவர்களுக்கு எங்களுடைய வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த குவாரி தொடர்பாக, திட்ட வடிவமைப்பாளர் ஜியோ எக்ஸ்ப்ளோரேசன் மைனிங்

சொல்யூசன் நிறுவனம். இங்கே திரையிட்டு காட்டினார்கள். இந்த கருத்துக் கேட்பு கூட்டம் எத்தனை பேர் ஆதரிக்கிறார்கள், எத்தனை பேர் எதிர்க்கிறார்கள், என்ற தேர்தல் போன்ற ஓட்டெடுப்பு அல்ல எனக் கூறினார்.

இந்த கருத்துக்கேற்பு கூட்டத்தை பொறுத்தவரை, மரியாதைக்குரிய தேசிய பசுமை தீர்ப்பாயம் 2018–ல், ஒரு குவாரி அமையும் பொழுது அந்தக் குவாரியைச் சுற்றி 500 மீட்டர் சுற்றளவில் இயங்கிக் கொண்டுள்ள குவாரிகள் ,ஏற்கனவே மூன்று ஆண்டுக்குள் இயங்கி முடித்த குவாரிகள், புதிதாக அனுமதி கேட்ட குவாரிகள் இவைகள் 5 ஹெக்டர் பரப்புக்குள் (12 ½ ஏக்கர் ) இருந்தால் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த வேண்டும் என உத்தரவிட்டது. அந்த உத்தரவின் அடிப்படையில் தான் (ஏனென்றால் கடந்த காலங்களில் எல்லாம் கருத்துக் கேற்புக் கூட்டம் கிடையாது) கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறுகிறது. பிரபாகரன் குவாரியெல்லாம் வெறும் 1 ¾ ஏக்கர் தான் 12 ½ ஏக்கருக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது. ஆனால் அப்படி இருந்தாலும் கூட 500 மீட்டர் சுற்றளவிற்குள் வேறு குவாரிகள் இருந்தால் நடத்த வேண்டும் என்றதன் அடிப்படையில் தான் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தின் முதல் அடிப்படையான விபரம் என்ன என்பது எனக்கு முன்னாள் பேசிய ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். குவாரி அமைவிடத்திலிருந்து 300 மீட்டர் சுற்றளவில் நான் ஊராட்சி மன்றத் தலைவராக பொறுப்பேற்றதில் இருந்து வீடு கட்டுவதற்கு எந்த அனுமதியும் கொடுக்கப்படவில்லை. அப்படி வீடுகள் கட்டப்பட்டிருந்தால் அது அனைத்தும் அங்கீகாரம் இல்லாத வீடுகளாகும். அது கிரைட்டீரியாவில் வராது. அவர் சொன்னது மிகச் சரி. ஏனென்றால், அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் இருந்தால் 300 மீட்டர் சுற்றளவில் குவாரிகள் அமைக்கக் கூடாது. குவாரிகள் அமைந்து விட்டால் 300 மீட்டர் சுற்றளவில் வீடுகள் கட்டக் கூடாது. இதுதான் சிறுகனிம சலுகை விதி 1959–ன் சட்டமே கூறுகிறது. இது இப்ப வந்த சட்டம் அல்ல. அதன் அடிப்படையில் வீடுகள் என்பது அங்கீகரிக்கப்பட்ட வீடுகள். அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் என்றால் என்னவென்று சிறுகனிம சலுகை விதிகள் 1959 சட்ட புத்தகத்தைப் பார்த்தோம் என்றால் பிரிவு 36–1ல் தெளிவாக சொல்கிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் என்பது அரசு ஆவணங்களில் சுட்டியாக அதாவது வருவாய்த் துறை ஆவணங்களில் மார்க்கிங் இருந்தால் அது அங்கீகரிக்கப்பட்ட வீடு. பஞ்சாயத்து அனுமதி கொடுத்திருந்தால் அது அங்கீகரிக்கப்பட்ட வீடு. அதே போல், DTCP அனுமதி கொடுக்கப்பட்டிருந்தால் அது அங்கீகரிக்கப்பட்ட வீடு. இதெல்லாம் தான் அங்கீகரிக்கப்பட்ட வீடு. நாம் வீடு கட்டுகிறோம், இந்த வீட்டிற்கு பஞ்சாயத்தில் இரசீது வாங்கியிருக்கிறோம், வருட வருடம் வரி கட்டுகிறோம். அப்படி இருந்தால்

அது அங்கீகரிக்கப்பட்ட வீடு கிடையாது. இந்த முறையில் இருந்தால் தான் அது அங்கீகரிக்கப்பட்ட வீடு.

இதன் அடிப்படையில் இந்த குவாரி அமையக் கூடிய ரேவதி, பிரபாகரன் மற்றும் ராஜசேகர் ஆகியோரது குவாரிப் புலத்தை நாங்கள் ஆய்வு செய்யும் போது, இதில் பல விசயங்கள் இருக்கிறது. என்னவென்றால், ஏற்கனவே வீடு இருந்தது அந்த வீட்டை இடித்துவிட்டார்கள். வீடு இருந்தது அந்த வீட்டில் இப்ப குடியில்லை. வீடு இருந்தது அது சிதிலம் அடைந்து விட்டது. வீட்டுக்காரர்கள் ஆட்சேபணையின்மை கடிதம் கொடுத்து விட்டார்கள். குவாரிக்காரர்கள் அந்த வீட்டை வாங்கி இடித்து விட்டார்கள். இப்படி எல்லாம் பலரும் சொல்வதனால் தமிழ்நாடு அரசினுடைய நில அளவை அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கேட்டு ஒரு உத்தரவு போன மாதத்தில் 15.07.2024ல் வாங்கி இருக்கிறோம். அதில் என்ன சொல்கிறார்கள் என்றால், U.D.R. மற்றும் நில அளவை புல வரைபடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வீடு தற்சமயம் சிதலம் அடைந்து விட்டாலோ அல்லது இடிந்து விட்டாலோ அந்த வீடு ஆரம்ப நிலையில் எவ்வாறு பதியப்பட்டிருந்ததோ அவ்வாறே இருக்கும். அதாவது U.D.R. என்பது தமிழ்நாடு முழுக்க 1979– 1985 வரை இருந்தது. அந்த காலங்களில் வருவாய்த்துறை ஆவணங்களில் அப்படி இருந்தால் அது அங்கீகரிக்கப்பட்ட வீடு என்று தெளிவாக சொல்லி இருக்கிறார்கள். தற்பொழுது அந்த வீடு இருக்கிறது, இல்லை, என்பது எல்லாம் இல்லை. இந்த ஆவணங்களில் கொடுக்கப்பட்டுள்ள வரைபடங்களை பார்த்தோம். இது தான் ரேவதி குவாரிக்கான வரைபடம். அதற்குள்ளும் வீடுகள் இருக்கிறது. இது நாங்கள் கொடுக்கவில்லை. ரேவதி குவாரிக்கு ஆவண பக்க எண் 83A ல் இருக்கிறது. அதே போல பிரபாகரனுடைய குவாரி புல எண்–389ல் அமைகிறது. அது பக்க எண்.204A அவற்றிலும் வீடுகள் உள்ளதை வருவாய் ஆவணங்களிலும், கிராம வரைபடத்திலும் காட்டுகிறது. அதே போல் பக்க எண் 332–A புல எண்.382 குவாரி அமையக் கூடிய ராஜசேகர் அவர்களுடையது அதிலும் வீடுகள் இருப்பது காட்டப்பட்டுள்ளது. இது எல்லாமே திட்ட வரைபடத்தில் உள்ள பக்கங்களைச் சொல்கிறேன். இதற்குள் வீடுகள் இருக்கிறது. இந்த வீடு இப்பொழுது குவாரிக்காரர்கள் வாங்கி இருக்கலாம், இடித்திருக்கலாம், சிதிலம் அடைந்திருக்கலாம். எப்படியிருந்தாலும் அது வீடுதான். இதை இங்கே இருக்கிற அதிகாரிகள் உட்பட அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியது. ஏனென்றால் இது மாதிரி தவறான ஆவணங்களை கொடுத்து, இப்பொழுது காங்கயம் வட்டம், குட்டப்பாளையம் ஊராட்சியில் கிராம நிர்வாக அலுவலர் வந்து நான் அறியாமையின் காரணமாக கொடுத்துவிட்டேன் என மன்னிப்பு கடிதம் எழுதிக் கொடுத்துள்ளார் என்

மீது எந்த நடவடிக்கையும் வேண்டாம் என்று வாக்குமூலமாகவே வட்டாட்சியரிட நாங்கள் அளித்த புகாரின் அடிப்படையில் கொடுத்துள்ளார்.

இதுதான் சட்டம். அந்த அடிப்படையில் இந்த குவாரி அமைகிறதா என பார்த்தால் ரேவதி கற்குவாரியை பொறுத்த வரையில் புல எண். 209–ல் அமைகிறது. இது தென்கிழக்கு பகுதியில் 107 வது மீட்டரில் ஒரு வீடு இருக்கிறது. புல எண்.203 மேற்குப் பகுதியில் 290–வது மீட்டரில் ஒரு வீடு இருக்கிறது. அதே போல புல எண். 208 ரேவதி குவாரியினுடைய வடக்குப் பகுதியில் 98வது மீட்டரில் ஒரு வீடு உள்ளது. வருவாய் ஆவணங்கில் குறிக்கப்பட்டுள்ளது. அதே போல் புல எண். 211 வடக்குப் பகுதியில் வீடு மற்றும் வீட்டுமனைகள் 100, 130, 190, 290 மீட்டரில் இருக்கிறது எல்லாம் வருவாய்த்துறை ஆவணங்களில், புல வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. புல எண். 381 வடகிழக்குப் பகுதியில் 295வது மீட்டரில் ஒரு வீடு காட்டப்பட்டுள்ளது. இது கணினி புலவரைபடம் தான். இந்த கணினி வரைபடத்திலேயே இந்த வீடுகள் எல்லாமே காட்டப்பட்டுள்ளது. இது இப்பொழுது போட்டது தான். இங்கே இருக்கிற எல்லோருமே பார்த்துக் கொள்ளுங்கள் இப்பொழுது இருக்கிற ஆவணங்களிலிலேயே நான் சொன்ன இடத்தில் இந்த வீடுகள் இருப்பது காட்டப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல் ரேவதி கல் குவாரியினை சுற்றி தற்காலிக, நிரந்தர குடியிருப்புகள் 300 மீட்டருக்குள் பல இருக்கிறது. சிறுகனிம சலுகை விதிகள் அடிப்படையில் மரியாதைக்குரிய உதவி இயக்குநர் கனிமம் அவர்கள் பல குவாரிகளுக்கு தற்காலிக, நிரந்தர குடியிருப்புகள் 300 மீட்டருக்குள் இருக்கக் கூடாது என சொல்கிறார்கள். ஏன் இருக்கக் கூடாது என்றால் வெடி வைக்கும் பொழுது 300 மீட்டர் வரை பாதிப்பு ஏற்படும். அதனால் பலர் பாதிக்கப்படுவார்கள். கடந்த மே 1ம் தேதி அன்று விருதுநகர் மாவட்டம், ஆதியூரில் அந்த மாதிரி வெடி வைத்த போது 2 கிலோ மீட்டருக்கு பாதிக்கப்பட்டுள்ளது. நம் மாவட்டதிலேயே கடந்த ஆண்டு விஜயலட்சுமி கற்குவாரி கோடங்கிபாளையத்தில் வெடி வைக்கும் போது மூன்றரை கிலோ மீட்டர் தூரம் உள்ள சூலூர் ஏர்போர்ஸ் பாதிக்கப்பட்ட நிலையெல்லாம் இருந்தது. அதனால் தான் 300 மீட்டர் தூரத்திற்குள் தற்காலிக, நிரந்தர குடியிருப்பு இருக்கக் கூடாது என உதவி இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்த குவாரியைச் சுற்றி 300 மீட்டருக்குள் பல வீடுகள் இருந்தது. அது மட்டுமல்லாது கூகுள் படங்களில் இதை போய் பார்த்தோம். குவாரியினுடைய அட்சரேகை, தீர்க்க ரேகை அடிப்படையில் வெளிமுனைப் பகுதியில் இந்த கூகுள் படங்களை பார்த்தோம் என்றால் 265, 296, 211வது மீட்டரில் மற்றும் கிழக்குப் பகுதியில் 156வது மீட்டரில் வடக்குப் பகுதியில் 82 வது மீட்டரில் அதே போல் மேற்குப் பகுதியில் 226 மீட்டரில், வடக்கு பகுதியில் 249, 138, 139

மீட்டரில் பல இடங்களில் வீடுகள் இப்போதும் இருக்கின்றன. கூகுள் வரைபடங்களில் தெளிவாக ஆவணமாக இருக்கிறது. அதனால் இந்த குவாரியைப் பொறுத்தவரை அரசு விதிகளை பின்பற்றிக் கிடையாது. அதனால் இந்த குவாரிக்கு சட்ட படியான வகையில் அனுமதி கொடுக்க முடியாது எனக்கூறினார்.

அது மட்டுமல்லாமல் சிறுகனிம சலுகை விதிகள் 1959 பிரிவு 36-1ல் தெளிவாக என்ன சொல்கிறது என்றால், குவாரி அமையக்கூடிய புலத்திலிருந்து 50 மீட்டர் சுற்றளவிற்குள் ஓடைகள் மற்றும் நீர்நிலைகள் இருக்கக் கூடாது. இந்த ரேவதி கற்குவாரியானது புல எண்.209ல் இருக்கிறது. இந்த குவாரியினுடைய மேற்குப் பகுதியில் புல எண்.206ல் ஓடை இருக்கிறது. வெறும் 10 மீட்டருக்குள்ளேயே ஓடை இருக்கிறது. கிராம வரைபடத்தில் இருக்கிறது மற்றும் புல வரைபடத்திலும் இருக்கிறது. ஆனால் இந்த ஓடை காட்டப்படவே இல்லை. இன்று ஓடையை மீட்டெடுப்பதற்காக பல கோடியில் கட்டப்பட்ட கட்டிடங்கள், கல்லூரிகள், மருத்துவமனைகள் கூட இடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஓடைகளை பொறுத்தவரை சொல்லலாம் இது பட்டா நிலத்தில் போகிற ஓடை. பட்டா நிலத்தில் போகிற ஓடை என்பது அதை நாங்கள் என்னவென்றாலும் செய்து கொள்ளலாம், அதை அழிக்கலாம், மாற்றிப் போடலாம் என கூறலாம். இதற்கு நாங்கள் தகவல் ஆணையத்தில் பொதுத் தகவல் அலுவலர்/உதவி ஆணையரிடமிருந்து தகவல் உரிமைச் சட்டத்தில் வாங்கி இருக்கிறோம். என்ன சொல்கிறார்கள் என்றால், வருவாய் நிலை ஆணை எண்.26 பிரிவு 15ன்படி நிலவியல் பாதை மற்றும் நிலவியல் கால்வாய் என குறிப்பிட்டு இருப்பினும், இவை பட்டா நிலத்தில் இருப்பினும், அவை அரசுக்கு சொந்தமானதாகும். இதில் ஆக்கிரமிப்பு ஏதும் ஏற்படுத்தப்பட்டிருப்பின் அதனை அகற்ற வட்டாட்சியருக்கு அதிகாரம் உண்டு என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது என கூறினார்.

இந்த 209 புலத்திற்கு மேற்குப் புறப்பகுதியில் புல எண். 206-ல் ஓடை இருப்பதை மறைத்து அனுமதி பெற்றுள்ளார்கள். எனவே, அந்த ஓடைக்கு இடைவெளி இல்லாததால் இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்கக் கூடாது. அதே போல் சிறுகனிம சலுகை விதிகள் 1959 பிரிவு 36 உள்ளாட்சி அமைப்புகள் மத்திய அல்லது மாநில அரசு நிறுவனங்கள் குடிநீர் வடிகால் வாரியம் போன்ற முகமை அமைப்புகள் ஆகியவைகளால் குவாரியின் வெளிமுனை பகுதியில் இருந்து 500 மீட்டர் சுற்றளவிற்குள் நீரேற்றும் அமைப்புகள், நீர் வழங்கும் அமைப்புகள் அதாவது போர்வெல் அல்லது ஓவர் ஹெட் டேங்க் மேல்நிலைத்தொட்டியோ அல்லது கீழ்நிலை தொட்டியோ இருந்தால் அதற்கு அனுமதி கொடுக்கக் கூடாது என சட்டம் சொல்கிறது. ஆனால் இங்கே ஊராட்சி மன்ற தலைவர் வந்திருக்கறார்கள், கிராம நிர்வாக அலுவலர் இருக்கிறார். நாங்களும் இந்த பகுதிக்கு போய் பார்த்தோம். 500

மீட்டர் சுற்றளவில் பல மேல்நிலைத் தொட்டிகள் இருக்கின்றன. பல போர்வெ ) இருக்கிறது. எனவே, ரேவதி கற்குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. அதே போல ஆய்வுக்காலத்தைப் பொறுத்தவரை இங்கே மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமம் கொடுத்துள்ள (Terms of Reference) காற்று மாசு, ஒலி மாசு, நீர் மாசு, மண் மாசு, பல்லுயிர் சூழல் மாசு மற்றும் சமூகப் பொருளாதார மாசு இதைப் பற்றித்தான். இங்கு நல்லது கெட்டது எல்லாம் பேசுவதற்கு இல்லை. குவாரி உரிமையாளர் மட்டும் சொன்னார்கள். ஏற்கனவே, இருந்த மாசு மாதிரி இப்பொழுது இல்லையென்று, மற்ற யாரும் இதைப் பற்றி பேசவில்லை. ஆனால் இதற்காகத்தான் இந்தக் கூட்டம். இந்த குவாரி இயங்கியது என்றால் இதெல்லாம் ஏற்படும், இந்த பாதிப்பை நாங்கள் எப்படி சரி செய்யப் போகிறோம் என்று சொல்வதற்குத்தான் இந்தக் கூட்டம். அப்படியான முறையில் வந்து ஆய்வு செய்வதற்கு என்னென்ன ஆய்வு செய்ய வேண்டும் என்று மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுமம் (SEIAA) 06.12.2022 ல் Terms of Reference (ToR) கொடுத்திருக்கிறார்கள். இது அவருடைய அந்த திட்ட அறிக்கையில் முதல் பக்கத்தில் இருக்கிறது 06.12.2022–க்கு பிறகு தான் ஆய்வு செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் மார்ச் 2022 லியே செய்து இருக்கிறார்கள் இதை முகிலன் சொல்லவில்லை. கம்பெனிக்காரர்கள் தான் சொல்கிறார்கள். மார்ச் 2022 முதல் மே 2022 வரைக்கும் அதாவது 9 மாதத்திற்கு முன்னாடியே நாங்கள் ஆய்வு செய்தோம் என்று சொல்கிறார்கள். செய்யச் சொன்னது 12–வது மாதம் ஆனால் செய்தது 9–வது மாதத்திற்கு முன்னால். இது எப்படியான லாஜிக் என்று தெரியவில்லை. அவர்கள் (SEIAA) சொல்லித்தான் செய்ய வேண்டும். ஆனால் அவர்கள் சொல்வதற்கு முன்னாடியே நாங்கள் செய்துவிட்டோம் என்று சொல்லி இவர்கள் அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். எனவே, இந்த திட்ட அறிக்கையின் அடிப்படையில் நடக்கக்கூடிய இந்தக் கூட்டமே முழுக்க முழுக்க ஒரு மோசடித்தனமான கூட்டம். இது மாதிரி செய்து திட்ட வடிவமைப்பாளர் குவாரிக்காரர்களை ஏமாற்றுகிறார்கள்.

அது மட்டுமல்ல. ஆய்வில் சொல்கிறார்கள் நாங்கள் எட்டு இடத்தில் காற்றாய்வு செய்தோம். எட்டு இடத்தில் தண்ணீர் எடுத்து ஆய்வு செய்தோம். எட்டு இடத்தில் மண் எடுத்து ஆய்வு செய்தோம். எட்டு இடத்தில் ஒலி ஆய்வு செய்தோம். இதில் மண், நீர், ஒலி ஆய்வு செய்வதற்கு மின்சாரம் வேண்டியது இல்லை. ஆனால் காற்று ஆய்வு செய்வதற்கு மின்சாரம் வேண்டும். அப்பொழுது எட்டு இடத்தில் மின்சாரமானது மூன்று மாதத்திற்கு தொடர்ந்து ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை கணக்கெடுப்பு எழுதிக் கொண்டே இருக்க வேண்டும். ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை கணக்கெடுப்பு எடுத்தோம் என்று எழுதி இருக்கிறார்கள். அப்பொழுது தொடர்ந்து மூன்று மாதம் மின்சாரம் இருந்திருக்க வேண்டும். அப்பொழுது மின்சாரம்

உள்ள இடத்தில் இருந்து தான் எடுத்திருக்கிறார்கள். இப்பொழுது சிப்காட்டில் ஒரே ஒரு காற்று அளக்கிற கருவிதான் இருக்கிறது. இப்பொழுது தான் அமைச்சரிடம் சண்டை போட்டு நான்கு மூலைக்கும் நான்கு கருவி வைத்து தருவதாக சொல்லி இருக்கிறார்கள். வடக்கில் பொருத்தியுள்ள கருவியைக் கொண்டு காற்று மாசுபாடு கணக்கிட்டால் அது ஊட்டியில் கணக்கிடும் காற்று மாசுபாடுக்கு நிகராக உள்ளது. காற்று அடிக்கிற திசை வேறு, கருவி வைத்திருக்கிற இடம் வேறு என்பதால் இப்போது மரியாதைக்குரிய அமைச்சர் திரு.முத்துசாமி அவர்களிடம் கூறி நான்கு இடங்களிலும் அமைக்கிறோம் என கூறி இருக்கிறார்கள். இப்போது நம்முடைய கேள்வி எட்டு இடங்களில் தொடர்ந்து ஆய்வு செய்தீர்கள் அல்லவா? அவ்வளவு பெரிய நிறுவனம் தானே, எந்த இடத்தில் மின்சாரம் எடுத்து செய்தீர்கள்? அதை காட்டுவார்களா? சொல்வார்களா?

தயவு செய்து மாவட்ட நிர்வாகமும், மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளும் SEIAA விற்கு எழுதுங்கள். இது மாதிரி எந்த இடத்தில் மின்சாரம் எடுத்தார்கள், எந்த வீட்டில் எடுத்தார்கள், எந்த தோட்டத்துச் சாலையில் எடுத்தார்கள், இல்லை எந்த நிறுவனத்திலிருந்து எடுத்தார்கள். எதில் வேண்டுமானாலும் எடுத்திருக்கட்டும். அப்பொழுது மின்பயனீட்டு அளவு அதிகமாகி இருக்க வேண்டும். ஆனால் அந்த மூன்று மாதத்திற்கு கணக்கு இல்லை. இது வந்து என்னது சும்மா அறைக்குள் உட்கார்ந்து கொண்டு நாங்கள் இந்த ஆய்வு செய்தோம், இதான் அறிக்கை அப்படி என்று கொடுக்கிறது தானே. இதுபோல் பல இடங்களில் நாங்கள் ஆதாரத்தோடு தெரிவித்து இருக்கிறோம். அது மட்டுமல்லாமல், SEIAA–வும், உதவி இயக்குநர், சுரங்கம் மற்றும் கனிமம் அவர்களும் 45 வகையான ஆவணங்கள் இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள் ஆனால் இங்கு 15 வகையான ஆவணங்கள் தான் காட்டப்பட்டுள்ளது. 30 வகையான ஆவணங்கள் இல்லை. ஆவணங்கள் இல்லாத போது எப்படி இதைப் பார்த்து கருத்து கூற முடியும். இந்த கூட்டம் உள்ளூரில் நடக்க வேண்டும் என்பதற்காக 15 ஆண்டுகள் போராடி நாங்கள் வாங்கி இருக்கிறோம். அது போல் இந்த அறிக்கைகள் இணையத்தில் ஏற்ற வேண்டும் என போராடி, தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்த பின்னால் முதன் முதலில் 07.10.2021 அன்று தான் ஆங்கில விரிவான சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை கோயமுத்தூர் பத்துமுத்தூர் குவாரிக்கு நடந்த பொழுது அப்பொழுது முதல்தான் இணையத்தில் ஏற்றுகிறார்கள். அதை தமிழில் கொடுக்க வேண்டும் என போராடி, இப்பொழுது ஆங்கிலத்தில் இருப்பதை தமிழிலும் இணையத்தில் ஏற்றுகிறார்கள். நீங்கள் 400 பக்கம் முதல் 500 பக்கம் வரை ஆய்வறிக்கை தயார் செய்கிறீர்கள் எங்களுடைய கேள்வி இந்த 45 வகையான ஆவணங்கள் சுமார் 50 அல்லது 100 பக்கங்களை சேர்த்து அறிக்கை தயார் செய்வதில் என்ன பிரச்சனை. இத்தகைய முழுமையான ஆவணங்களை

இணையத்தில் ஏற்றச் சொல்ல வேண்டும். ஏனென்றால் வெளிப்படையான நிர்வாக என பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஆவணங்களை மட்டும் ஏற்றப்படுவதே கிடையாது. நாங்களும் SEIAA தலைவர் அவர்களிடம் கூறி இருக்கிறோம். நீங்களும் இதை தெரியப்படுத்துங்கள். எனவே, கருத்துக் கேட்புக் கூட்டங்களில் 45 வகையான ஆவணங்களில் 30 வகையான ஆவணங்கள் இல்லாமல் நடக்கிறது.

எனவே, பல ஆவணங்கள் இருக்கும் போது தான் அதை எடுத்து பேச முடிகிறது. ஆவணங்கள் இல்லாமலோ அல்லது அதை மறைத்தோ நடக்கும் போது, எதைப்பற்றி பேச முடியும். சும்மா நல்லது கெட்டது இப்படித்தான் பேசமுடியுமே தவிர தொழில்நுட்பம், க்ரிட்டீரியா அந்த அடிப்படையில் கையாள முடியாது. எனவே, அந்த ஆவணங்கள் அடிப்படையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இப்படி ரேவதி கற்குவாரியில் சட்ட அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், ஓடைக்கு இடைவெளி இல்லாமல் இருப்பது, போர்வெல் மேல்நிலைத் தொட்டிக்கு 500 மீட்டர் இடைவெளி இல்லாமல் இருப்பது போன்ற விதிமீறல்களோடு இருக்கிறது. அடுத்ததாக ஒரு மிகப்பெரிய விஷயம் இது நம்ம மாவட்டத்தில் சொல்லி மிகப்பெரிய பிரச்சனை ஆகியிருக்கிறது. குவாரியினுடைய வெளிமுனைப்பகுதியில் இருந்துதான் தூர அளவீடு செய்ய வேண்டும். அட்சரேகை தீர்க்க ரேகை என்று எல்லைக்கல் நடுகிறார்கள். இந்த கிராம நிர்வாக அலுவலரும் டி.என்.பி.எஸ்.சி. தேர்வு எழுதி தேர்வானவர் தான். ஆனால் அவர் எப்படிக் கொடுக்கிறார் என்றால் குவாரியின் மையப்பகுதியில் இருந்து தூர அளவிட்டு அறிக்கை கொடுத்திருப்பதால் தானாகவே சுத்தி இருக்கிற வீடுகள் எல்லாம் வராமலேயே போய்விடுகிறது. 10 ஏக்கர் குவாரி இருந்தால், 10 ஏக்கர் குவாரிக்குள்ளேயே 300 மீட்டர் முடிந்து விடும் என்று கூறினார்.

காங்கயம், குட்டப்பாளையத்தில் அங்கு இருக்கக் கூடிய கிராம நிர்வாக அலுவலர் நான் அறியாமல் செய்து விட்டேன். இனி இதுபோல் தவறு செய்யமாட்டேன் என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில், வரவலை கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கு மோசடியான ஆவணம் கொடுத்ததற்காக சிந்தாமணிப்பட்டு காவல் நிலையத்தில் FIR போடப்பட்டுள்ளது. அதுபோல மோசடியான போலி ஆவணங்களை வைத்துக் கொண்டு தான் இந்த கருத்துக் கேட்புக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. எனவே இதன் மீது மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் கிராம நிர்வாக அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அடுத்ததாக, பிரபாகரன் அவர்களுடைய குவாரி. அந்தக் குவாரியைப் பொறுத்தவரை அதிலும் வரைபடம் கொடுத்திருக்கிறார்கள். வரைபடத்தினுடைய பக்க எண். 204 அதற்கு முன்னாடி புல வரைபடம் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் இந்த புல வரைபடத்தை கணினியில் எடுக்கவில்லை. இந்த ஆவணப் புத்தகத்தில் இருந்து எடுத்திருக்கிறோம். பக்க எண். 203 பாருங்க. இந்த குவாரிக்குள்ளேயே வீடு இருக்கிறது. குவாரிக்குள் வீடு இருப்பது கிராம நிர்வாக அலுவலர் 30.03.2023ல் கையெழுத்து போட்டு கொடுத்திருக்கிறார்கள். குவாரிக்குள் வீடு இருக்கிறது என்று அவர் காட்டியிருக்கிறார். இது முகிலன் தயாரித்த ஆவணம் அல்ல. கிராம நிர்வாக அலுவலரும், திட்ட அலுவலரும் சேர்ந்து தயாரித்த ஆவணம். அதுமட்டுமல்ல, இங்கே கிராம வரைபடத்தை எடுத்து பார்த்தோம். இந்த கிராம வரைபடத்திற்குள்ளும் பார்த்தோம் என்று சொன்னால், புல எண்–388, 389ல் வீடு இருக்கிறது. தலைவர் சொன்னார் 300 மீட்டர் சுற்றளவிற்குள் நாங்கள் எந்த அனுமதியும் கொடுக்கப்படவில்லை என்று. ஆனால், புல எண்–400ல் இத்தனை ப்ளாட் போடப்பட்டிருக்கிறது என்று காட்டப்பட்டிருக்கிறது. இது அங்கீகரிக்கப்பட்ட வீடாக, வீட்டுமனையாக இருந்தால் தான் கிராம வரைபடத்தில் ஏற்றுவார்கள். 02.09.2024 அன்று எடுத்த கணினி புல வரைபடத்தில் இத்தனை வீட்டுமனைகள் இருப்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் இந்த குவாரியைப் பொறுத்தவரை புல எண். 389–க் குவாரியின் புலத்திற்குள்ளேயே ஒரு வீடு இருக்கிறது. அதேபோல் புல எண். 387/1சி2–ல் வடமேற்கில் ஒரு வீடும், புல எண் 387–ல் தெற்கில் ஒரு வீடும், புல எண். 400–ல் 70வது மீட்டரில் தென்கிழக்கு பகுதியில் வீட்டுமனை மற்றும் வீடுகளும் இருக்கிறது. இதுமட்டுமல்ல, ஏற்கனவே சொன்னது போல இந்தக் குவாரியைச் சுற்றி 300 மீட்டர் சுற்றளவில் தற்காலிக நிரந்தர குடியிருப்புகள் இருக்கின்றன. அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், வீட்டுமனைகள் இருப்பதால் பிரபாகரன் கற்குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. அதே போல் தற்காலிக நிரந்தர குடியிருப்புகள் 300 மீட்டர் தூரத்திற்குள் இருப்பதால் பிரபாகரன் கற்குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. அதுமட்டுமல்லாமல், இந்த குவாரிப்புலத்தினுடைய கூகுள் படங்களை நாங்கள் எடுத்துப் பார்த்தோம். கூகுள் படங்களை பார்க்கும் பொழுது பிரபாகரன் குவாரியில் தெற்குப் புறத்தில் 119, 262 ஆகியவற்றில் எல்லாம் வீடு இருக்கிறது.

அதே போல், கிழக்குப் புறத்தில் 20 மீட்டரிலேயே கட்டிடங்கள் இருக்கின்றது. இதெல்லாம் கூகுள் படங்களில் காட்டப்பட்டுள்ளது. வருவாய்த்துறை ஆவணங்களிலும் இருக்கிறது, தற்காலிக நிரந்தர தொழிலாளர் குடியிருப்பும் இருக்கிறது. கூகுள் படங்களிலும் வீடுகள் காட்டப்பட்டிருக்கிறது. எனவே, பிரபாகரன் கற்குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. இதிலும்

பார்த்தோம் என்று சொன்னால் 500 மீட்டர் சுற்றளவில் மேல்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் நீரேற்று நிலையம் இருக்கிறது. இதில் ஆய்வுக் காலம் சரியாக இருக்கிறது. அவர்கள் ToR கொடுத்த பின்னால்தான் ஆய்வு செய்திருக்கிறார்கள். அதே போல் கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழும் முழுக்க முழுக்க மோசடியாக பிரபாகரன் கற்குவாரிக்கு மையப்பகுதியில் இருந்து கொடுத்துள்ளார்கள். எனவே, இது மோசடியான ஆவணத்தை வைத்துத் தான் கிட்டத்தட்ட 500 பேர் இக்கூட்டத்தில் கலந்திருக்கிறார்கள். இவ்வளவு பேருமே ஒரு மோசடியான ஆவணத்தை வைத்துக் கொண்டு தான் பேசிக்கொண்டிருக்கிறோம். உண்மையான ஆவணங்கள் கிடையாது. அப்படியான நிலையில் தான் இந்தக் கூட்டம் நடந்து கொண்டு இருக்கிறது. அதனால் பிரபாகரன் கற்குவாரிக்கு புல எண். 389/1சி2-ல் அமையக்கூடிய பிரபாகரன் கற்குவாரிக்கு 1 ¼ ஏக்கர் பரப்பளவு இருக்கிற குவாரிக்கு அனுமதி கொடுக்க முடியாது எனக்கூறினார்.

அடுத்ததாக ராஜசேகர் கற்குவாரி. புல எண்.382/2ஏ (ப). தயவு செய்து நாங்கள் வருவாய்த்துறையிடம் ஒன்று சொல்லிக் கொள்கிறோம். சாதாரண 3 செண்ட் நிலம் ஒருத்தருக்கு கொடுக்கிறீர்கள் அல்லது 1 செண்ட் நிலம் ஒருத்தர் சொந்தமாக வாங்குகிறார்கள் என்றால் அதை உட்பிரிவு செய்துவிடுகிறார்கள். இவர்கள் காலங்காலமாக தொழில் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், இவர்கள் நிலத்தை உட்பிரிவு பண்ணாமல் பகுதி என்றே குறிப்பிடுகிறார்கள். இப்படி சொல்வதால் என்னவென்று கேட்டீர்கள் என்றால், யாரும் அதனை போய் சோதனை செய்ய முடியாது. குவாரி வந்து அதற்குள்தான் இருக்கிறது என்று. ஒரு 10 ஏக்கர் நிலத்தில் 2 முதல் 3 ஏக்கர் நிலத்தில் குவாரி அமைக்கும் பொழுது நீங்கள் போய் பார்த்து கண்டுபிடிக்க இயலாது எது அனுமதி கொடுத்த பகுதி, எது அனுமதி கொடுக்காத பகுதி என்று கல் நட்டிருந்தால் தான் தெரியும். பெரும்பாலான குவாரிகளில் குவாரிக்கு அனுமதி கொடுக்கும் பொழுது கல் இருக்கும் அப்புறம் கல் காணாமல் போய்விடும். இந்த குவாரி எப்படி என்று தெரியவில்லை.

நான் கேட்பது வருவாய்த்துறை ஆவணங்களில், கிராம நிர்வாக அலுவலர் இதற்கான அனுமதி கேட்டு வரும் பொழுது தயவுசெய்து உட்பிரிவு செய்துவிடுங்கள் என கூறுங்கள். அப்படி செய்து விட்டு நடத்தச் சொல்லுங்கள். இதில் பிராபகரன் குவாரி மட்டும் தான் உட்பிரிவு செய்து இருக்கிறது. மற்ற எல்லாமே பகுதி தான். நீங்கள் யாருமே உண்மையை தெரிந்து கொள்ள முடியாது. 1 செண்ட் நிலம் வைத்திருக்கும் பொதுமக்கள் அந்த நிலத்தை உட்பிரிவு செய்கிறார்கள். ஆனால் இங்கு அப்படி இல்லாமல் இருக்கிறது. அதை செய்ய வேண்டும் என தெரிவித்தார்.

-57-

மேலும், பிரபாகரன் கற்குவாரியைப் பொறுத்தவரை இந்த குவாரிக்கு அனுமதி கேட்டு விண்ணப்பம் கொடுத்திருக்கிற காலம் 07.12.2022. அப்பொழுது தான் அந்த குவாரிக்கு அவர்கள் அனுமதியே கோருகிறார்கள். இந்த அனுமதி கேட்ட இடத்திற்கு கனிமவளத்துறை உதவிப் புவியியலாளர் 2023ல் தான் ஆய்வு செய்கிறார்கள். இந்த குவாரிக்கு ToR என்று சொல்லக்கூடிய மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுமத்தின் ஆய்வு செய்வதற்கான வழிவகைகள் என்னென்ன ஆய்வெல்லாம் செய்ய வேண்டும் (காற்று, ஒலி, மண், நீர், பல்லுயிர்ச்சூழல் மற்றும் சமூக பொருளாதார சூழல் என அவர்கள் கொடுத்த தேதி 03.06.2024. SEIAA அப்பொழுது தான் கொடுக்கிறது. விண்ணப்பம் கொடுத்தது 07.12.2022, SEIAA இந்த வழிமுறைகள் எல்லாம் முடித்துவிட்டு ஆய்வு செய்ய கொடுப்பது 03.06.2024. இவர்கள் ஆய்வு செய்ததாக சொன்னது எப்பொழுது என்றால், மார்ச் 2022–லிருந்து மே–2022 வரை இது புத்தகத்தின் முதல் பக்கத்திலேயே இருக்கிறது. விண்ணப்பமே கொடுக்காத குவாரி ToR சொல்கிற தேதியிலிருந்து 27 மாதங்களுக்கு முன்னாடியே அதாவது 2 ¼ வருடத்திற்கு முன்னாடி ஆய்வு நடந்திருக்கிறது. இது எப்படி நடக்கும் என்று யோசித்துப் பாருங்கள். அதாவது பெண்ணே பார்க்கவில்லை. மாப்பிள்ளை பார்க்கவில்லை. கல்யாணமாகி, குழந்தை பிறந்து, குழந்தைக்கு பெயர் வைத்து, பிறந்தநாள் கொண்டாடி இவ்வாறு போய்க் கொண்டு இருக்கிறது என்றால் இது என்னசார் நாடா இது. எங்கே சட்டம்? விண்ணப்பமே கொடுக்காத குவாரிக்கு ஆய்வு செய்தோம் என்று இந்த ஆய்வறிக்கை காட்டி, நீங்கள் எல்லாம் கருத்துச் சொல்லுங்கள் என்று அழைத்து, அதிலும் எல்லோரும் கருத்து கூறி, நானும் தான் சொல்லிக்கொண்டு இருக்கிறேன்.

அப்பொழுது எந்த அளவிற்கு மோசடி நடக்கிறது. இதெல்லாம் மாவட்ட நிர்வாகம் வந்து கவனத்தில் எடுத்துக் கொண்டு, தயவு செய்து, அதிகாரிகள் சம்பளம் வாங்குவது மக்களின் வரிப்பணம். செய்கிற வேலை யாருக்கு. திட்ட வடிவமைப்பாளரும் அதுதான். நீங்கள் கொடுத்த அறிக்கையில் இருந்து தான் எடுத்துள்ளது. நாங்கள் எங்கேயும் போய் கண்டுபிடித்து வரவில்லை. நீங்கள் கொடுத்த அறிக்கை தான். ஆனால் இப்படியான முறைகளில் இருப்பதெல்லாம் மிகவும் மன வருத்தத்தையும், வேதனையையும் அளிக்கிறது.

குவாரிக்காரர் எல்லாம் சொன்னார்கள். நாங்கள் சட்டப்படிதான் செய்கிறோம் என்று. சட்டப்படி செய்தால் நாங்கள் வந்திருக்க வேண்டிய தேவையே இல்லை. வாழ்க என்று போய்விடுவோம். நான் சொல்வதெல்லாமே அரசினுடைய ஆவணங்களில் இருந்து தான். முகிலன் தயாரித்த தனியான ஆவணங்கள் அல்ல. எங்களுக்கு இங்கே இருக்கிற குவாரிக்காரர்கள் எவருடைய முகமும் தெரியாது. இங்கிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் தான் எங்கள் ஊர். ஆனாலும் கூட

எங்களுக்கு யாருடைய முகமும் தெரியாது. ஆனாலும் கூட இந்தக் குவாரி சட்ட அடிப்படையில் இருக்கிறதா இல்லையா என்கிறது தான். அப்பொழுது ராஜசேகர் அவர்களுடைய குவாரியை பொறுத்தவரை ஆய்வு காலம் இவ்வளவு மோசடியாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல, ராஜசேகர் குவாரி அமையக்கூடிய புலத்தினுடைய கிராம வரைபடம் இதுதான். பக்கம் 332–A–ல் கிராம வரைபடத்தை கொடுத்துள்ளார்கள். இதிலும் கிராம நிர்வாக அலுவலர் குவாரியினுடைய மையப்பகுதியில் இருந்து தான் அளவீடு செய்துள்ளார்கள். இந்த மாவட்டத்தில் குவாரின் மையப்பகுதியில் இருந்து அளவீடு செய்தது தொடர்பாக, 2022ல் கோடங்கிபாளையத்தில் எஸ்.ஜி. கற்குவாரி பிரச்சனை ஆகி, பெரிய போராட்டம் எல்லாம் நடந்து, மிகப்பெரிய பிரச்சனை எல்லாம் ஓடிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இங்கே பல குவாரிகள் தவறான ஆவணங்களைக் கொடுத்ததன் அடிப்படையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் திரும்பவும் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் ஆறு மாதம், ஒரு வருடத்திற்கு முன்னாடித்தான் கொடுத்துள்ளார். அப்பொழுது நாங்கள் என்ன சொன்னாலும், சட்டத்தை மதிக்க மாட்டோம், விதியை மதிக்க மாட்டோம் என குவாரிக்காரர்கள் இருக்கலாம், அதிகாரிகளே இருந்தால் நாங்கள் என்ன செய்வது.

தயவு செய்து மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் எல்லோருக்குமே வட்டாட்சியர், கோட்டாட்சியர், கனிமத்துறை அதிகாரிகள் என எல்லா அதிகாரிகளுக்கும் தெளிவான அறிவுரை கொடுங்கள். வெளிப்படையான முறையில், நேர்மையான முறையில் ஆவணங்கள் கொடுக்கச் சொல்லுங்கள். இதற்கெல்லாம் நாங்கள் நீதிமன்றத்திற்கு சென்றால், அதிகாரிக்கு வேலை போய்விடும். எங்களின் நோக்கம் அது அல்ல. நாங்கள் திரும்ப திரும்ப அதைத் தான் சொல்கிறோம். தனிபட்ட அதிகாரி யார் இதை கொடுத்தார்கள் என்று கூட எங்களுக்குத் தெரியாது. ஆனால் தயவு செய்து, சட்டத்தை மதித்து நடங்கள். உங்களது வாழ்க்கையை தொலைத்துக் கொள்ளாதீர்கள் என தெரிவித்துக் கொள்கிறோம் எனக்கூறினார்.

மேலும், இந்த குவாரி அமையக்கூடிய புலங்களைச் சுற்றி தெற்கு, வடமேற்கு, வடக்குப் புறத்தில் பார்த்தீர்கள் என்றால் பல வீடுகள் இருப்பது புல வரைபடத்தில் காட்டியுள்ளார்கள். அதே போல் புல எண். 392 தெற்குப் புறத்தில் அந்த குவாரியை ஒட்டியே வீடு இருக்கிறது. அது கிராம வரைபடத்தை பார்த்தால் தெரியும். அருகில் உள்ள காலையில் 1மீட்டரிலேயே வீடு இருக்கிறது. அந்த வீடு இப்பொழுது இடிந்து கூட போயிருக்கலாம். சிதலமடைந்திருக்கலாம். ஆனால், ஆவணங்களில் உள்ளது. ஆவணங்களில் இருந்தாலே அது வீடு அல்லது வீட்டுமனை. வேறு ஆவணமாக மாற்ற முடியாது. வடமேற்குப் புறத்திலும், வடக்குப் புறத்திலும் 290வது மீட்டரில் ஒரு

வீடு இருக்கிறது. வடக்குப் புறத்தில் 295 மீட்டரில் ஒரு வீடு உள்ளது. இதெல்லாமே புல வரைபடம் மற்றும் கிராம வரைபடத்தில் ஆவணமாக இருக்கிறது. ஏதோ வாய் புளித்தது, மாங்காய் புளித்தது என்று நாங்கள் சொல்லிவிட்டு போகவில்லை. எல்லாமே ஆவணமாக இருக்கிறது. பஞ்சாயத்து தலைவருமே இது போல் நம் ஊராட்சியில் இருக்கிறதா என்று இதை சரிபார்த்துக் கொள்ளலாம். எனவே, இந்த குவாரிப் புலத்தைச் சுற்றி அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் இவ்வளவு இருக்கின்றது, அதே போல் இந்த குவாரியைச் சுற்றி தற்காலிக நிரந்தர குடியிருப்புகள் பல இருக்கின்றன. இது கூகுள் வரைபடத்தில் உள்ளது. அதுமட்டுமல்லாமல், கூகுள் படங்களில் நாங்கள் பார்த்தோம். வடக்குப் பகுதியில் 253, 163, 246 ஆகியவற்றில் வீடு இருக்கிறது. தென்மேற்குப் பகுதியில் 134ல் வீடு இருக்கிறது. கிழக்குப் பகுதியில் 159ல் வீடு இருக்கிறது. வடமேற்குப் பகுதியில் 237, 254ல் வீடு இருக்கிறது. மேற்குப் பகுதியில் 256ல் வீடு இருக்கிறது. இத்தனை வீடுகள் கூகுள் படத்தில் இதெல்லாம் காட்டப்பட்டுள்ளது. இன்னும் இதில் பல விசயங்கள் நமக்கு தெரியாதது என்னவென்று கேட்டீர்கள் என்றால், இந்த குவாரி புலத்தை ஒட்டியே அருகாமையிலே நஞ்சப்பா தொழில்நுட்ப கல்வி நிறுவனம் என்ற தொழில்நுட்பக் கல்லூரி இருந்தது. ஒரு தொழில்நுட்பக் கல்லூரிக்கு கட்டிடம் கட்டுவது என்றால், அரசு அங்கீகாரம் பெற்றுவிட்டுத் தான் கட்டிடம் கட்ட முடியும். அப்பொழுது அதில் வந்து, பின்னாடி பார்கும் கூட வைத்திருந்தார்கள். இது எல்லாம் குவாரியினுடைய 300 மீட்டர் சுற்றளவிற்குள்ளேயே அந்த பள்ளி, கல்லூரி எல்லாம் உள்ளது. அதெல்லாம் காட்டப்படவில்லை. அதுமட்டுமல்லாமல், மிகக் குறிப்பாக, இந்த குவாரிப் புலத்திற்கு அருகிலேயே தமிழக அரசால் ராம்சார் அங்கீகாரம் பெற்ற நஞ்சராயன் குளம் (Lake) உள்ளது.

அதாவது சரணாலயத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தான் கணக்கு. ஆனால் இங்கு ஏரி இருக்கிறது என்ற நாம் யோசிக்க வேண்டும். ஒரு பட்டாசு வெடித்தால், நம் வீட்டில் இருக்கும் நாய், ஆடு, மாடு எல்லாம் ஓடிவிடும். இது பறவைகள் சரணாலயம். உலகம் முழுவதும் உள்ள பறவைகள் எல்லாம் இங்கு வந்து வசிக்கிறது. இந்த வெடி சத்தத்தினால் ஏற்படும் நில அதிர்வு 5 கி.மீ சுற்றளவு வரை கேட்கிறது. பறவைகள் சரணாலயம் என்பது பறவைகள் இங்கு இனப்பெருக்கம் ஏற்படுத்தும். தி.மு.க. அரசு வந்து ஏற்படுத்தப்பட்ட 19 சரணாலயங்களில் இந்த சரணாலயமும் ஒன்று. இதில் எப்படி இனப்பெருக்கம் நிகழும். எந்த இனப்பெருக்கமுமே நிகழாது இந்த அதிர்வுகளால். எனவே, இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்கக் கூடாது எனக்கூறினார்.

அது போல, வரலாற்று சிறப்புமிக்க கைத்தமலை. இந்த குவாரியினுடைய சில கிலோ மீட்டர் தூரத்தில் தான் உள்ளது. இவர்கள் சொல்லக்கூடிய சுற்றுச் சூழல்

பாதிப்பு ஏற்படக்கூடிய 10 கிலோ மீட்டர் எல்லைக்குள் இந்த கைத்தமலை உள்ளது. சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்படக்கூடிய 10 கிலோ மீட்டருக்குள் உலகத்தினுடைய 2500 வருடங்களுக்கு முன்பு தொன்மையான நாகரீகம் கொண்ட கொடுமணல் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், இந்த குவாரியில் மாசுபாடே கிடையாது என்று, குவாரி, கிரசர், எம்.சாண்ட் உரிமையாளர்கள் கூறுகிறாகள். இந்த மூன்று ஆலைகளால் வரக்கூடிய பெரிய மாசு, ஒன்று காற்று மாசு. இன்றைக்கு அதில் வெளியிடப்படக்கூடிய சட்ட விரோதமாக வெடிக்கக் கூடிய வெடிகளால் கிட்டத்தட்ட 45 நிமிடம் அந்தக் காற்று வெளியே வருகிறது. அந்த காற்றே 10 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு செல்கிறது. அந்த காற்றை ஒருவர் ஆறுமாதம், ஆறுவருடம் இப்படி சுவாசித்தால் தானாகவே B2 டைப் சுகர் ஏற்படும். இதில் உணவின் மூலமாக வரக்கூடிய சர்க்கரை நோயை விட காற்றின் மூலமாக வருக்கூடிய சர்க்கரை நோய் தான் மிக அதிகமான பாதிப்பை ஏற்படுத்துக்கிறது. உலக அளவிலான ஆய்வில் தெரிகிறது. இது மாசுக்கட்டுப்பாட்டு பொறியாளர் அவர்களுக்கும் தெரியும். இங்கே இருக்கக் கூடிய ஒவ்வொருவருக்கும், நீங்கள் ஆதரிக்கலாம் அல்லது எதிர்க்கலாம் ஆனால் இந்த குவாரி காற்றை சுவாசித்தால், சுற்றி இருக்கக் கூடிய 10 கிலோமீட்டர் சுற்றளவில் உள்ளவர்களுக்கு B2 டைப் சுகர் வருவது உறுதி. இங்கு சுகருக்கு யார் மாத்திரை எடுத்துக் கொள்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. இப்படியான நோய் பாதிப்பும் இருக்கிறது. சமூக பொருளாதார பாதிப்பு என்று சொல்லும் பொழுது, ஒரு குவாரியை பற்றி ஆய்வு செய்யும் போது அந்த குவாரியைச் சுற்றியுள்ள 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக் கூடிய மக்கள் என்னென்ன நோயால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த புள்ளிவிபரமும் எடுங்கள் என தொடர்ச்சியாக கேட்டுக்கொண்டு இருக்கிறோம்.

சிப்காட்டை சுற்றி 30 கிலோ மீட்டர் சுற்றளவை சுற்றி கேன்சர் நோயாளிகள் உள்ளார்கள். முழுவதும் மலட்டுத் தன்மை, ஆஸ்துமா என எல்லா நோய்களும் வந்து விட்டது. இன்றைக்கு அங்கே 100 புற்றுநோய் கண்டறியும் முகாம் ஊத்துக்குளி வரைக்கும் போட்டுக் கொண்டுள்ளார்கள். அப்பொழுது நாங்கள் சொல்வது எதிர்கால சந்ததியினர் வாழ்க்கைக்காக. இன்னைக்கு நாம் சாப்பிட்டுவிட்டு போய்விடலாம். வாழ்க்கை முடித்து விடலாம். இந்த அடிப்படையில் இருப்பதை தயவு செய்து ஒரு மருத்துவ ஆய்வாக இதில் சேர்க்க வேண்டும் என தயவு செய்து கேட்டுக் கொள்கிறோம். இன்றைக்கு என்னென்ன நோயில் இருக்கிறார்கள் என்று ஆய்வு செய்ய வேண்டும். மேலும் நாங்கள் வேறு சில இடங்கில் இது போன்று ஆய்வு செய்திருக்கிறோம், குறிப்பாக கூடங்குளம் அணு உலை தொடங்கிய பின் எத்தனை பேர் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று. அதுபோன்ற ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அது மட்டுமல்லாமல் இங்கே குவாரிகளால் தான் வீடெல்லாம் கட்டப்படுகிறது என்று கூறுகிறார்கள். இங்கே குவாரி என்பது 19-க்கு முன்னாடி பிரச்சனை இல்லை. கரூரில் ஆற்று மணல் எடுப்பதை நாங்கள் தான் போராடி நிறுத்திவைத்தோம். தமிழ்நாடு முழுக்க நீதியரசர் மகாதேவன் அவர்களும் அங்கே இருக்கக்கூடிய ஜி.ஆர்.எஸ். அவர்களும் நிறுத்தினார்கள். அதற்குப் பின்னால் நிலத்தை வெட்டி செயற்கை மணல் எடுக்கும் தொழில் நடந்தது. ஆனால் இந்த மணல் குவாரி நிறுத்தப்படும் போது, தமிழக அரசு எங்களுடைய கோரிக்கைகளின் அடிப்படையில் வெளிநாடுகளில் இருந்து மாதம் 5 லட்சம் மெட்ரிக் டன் வெளிநாட்டு இருந்து இயற்கை ஆற்று மணலை இறக்குமதி செய்வது என ஒரு உத்தரவு பிறப்பித்தது. நம்நாட்டில் நில அதிர்வு குறைவு. ஆனால் இந்தோனேசியா, மலேசியா போன்ற நாடுகளில் நில அதிர்வு அதிகம். அதனால் அங்கே இருக்கக் கூடிய மணலை டன் ஆயிரம் ரூபாய்க்கு எடுத்துச் செல்வார்கள். இங்கே நாம் எம்.சாண்டை டன் 4000-க்கு வாங்குகிறோம். ஆயிரம் ரூபாய்க்கு இறக்குமதி செய்வதற்கு துறைமுகத்தில் தயாராக இருக்கிறார்கள். ஆனால் கொரானாவை காரணம் காட்டி அரசு நிறுத்தி வைத்து விட்டது. அதற்கு பின்பு தி.மு.க. அரசு வந்தபிறகு, எங்களுடைய கோரிக்கையை 2022 ஜூன் வரைக்கும் வைத்திருந்தார்கள். மாதம் 5 லட்சம் என்பதை 15 லட்சமாக மாற்றினால் தமிழ்நாட்டிற்கு ஒரு நாளைக்கு தேவைப்படும் 21000 டன் மணலை பூர்த்தி செய்து கொள்ளலாம். இங்கே ஆறும் பாழாகாது, மலையும் பாழாகாது, நிலத்தடிநீரும் பாழாகாது. எனவே, அவ்வாறு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அதேபோல் குவாரி அமையும் புலத்திலிருந்து 500 மீட்டர் தூரத்தில் நொய்யல் ஆறும், குவாரிக்கு அருகாமையிலேயே அதன் துணையாறும் ஓடுகிறது. இந்த குவாரி 37 மீட்டர் (கிட்டத்தட்ட 120 அடி) ஆழம் வெட்டும் போது, அந்த ஓடைகள், ஆறுகளில் ஓடுகின்ற தண்ணீர் குவாரிக்குள் தான் வரும். அதுவும் நொய்யல் ஆற்று தண்ணீர் எல்லாம் விஷத் தண்ணீர் என்று நான் சொல்லவில்லை. உலகத்தில் உள்ளவர்கள் எல்லாம் செத்து போன ஆற்றின் வகையில் சேர்த்து விட்டார்கள். அந்த தண்ணீர் இங்கே தேங்கி நின்றால், சுற்றி இருக்கிற விவசாய நிலம் எல்லாம் என்ன ஆகும். விஷதண்ணீர் எல்லாம் பாறைக் குழிக்குள் தேக்கி வைத்து சுற்றி இருக்கக் கூடிய நிலங்களில் போர் போட்டோ, திறந்த வெளிக் கிணறாகவோ அமைத்து எப்படி விவசாயம் செய்ய முடியும் என்று கூறினார்.

மேலும், இங்கே குவாரிகள் எல்லாம் 10 மீட்டர் ஆழம் வெட்டி எடுப்பதற்கு அனுமதி கொடுத்தால் பரவாயில்லை. நீங்கள் 40 மீட்டர் கொடுப்பதெல்லாம் முழுக்க முழுக்க சட்டத்திற்கு விரோதமான செயலாகும். இதற்கு மாற்றாக, நாங்கள் வெளிநாட்டு இயற்கை ஆற்று மணலை இறக்குமதி செய்ய வேண்டும் என கேட்டுக்

கொள்கிறோம். அதற்கு அடுத்தபடியாக மூன்று குவாரிகளுக்கும் பொதுவாட சாலையைப் பொறுத்தவரை ஒரு கிராமப் புறச் சாலை என்றால் 10 டன் மட்டுமே எடை கொண்டு போக வேண்டும் என தெளிவாக அரசினுடைய உத்தரவிலிருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. சுப்ரீம் கோர்ட் இதைச் சொல்லி உள்ளது.

அதேபோல் மாவட்ட நெடுஞ்சாலை, மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் எல்லாம் 6 டயர் லாரிகளில் 18 டன்னும், 10 டயர் லாரிகளில் 28 டன்னும், 12 டயர் லாரிகளில் 36 டன்னும், 14 டயர் லாரிகளில் 42 டன்னும் 16 டயர் லாரிகளில் 48 டன்னும் தான் கொண்டு செல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த கிராமப் புறச் சாலைகளிலே 90 டன் கொண்டு போகிறார்கள். பஞ்சாயத்து தலைவர்களுக்கு தெரியாதது அல்ல. டிராக்டர் லோடு பத்து டன் தான் போக வேண்டும். ஆனால் 90 டன் போகிறது. 90 டன் போகும் போது, 5 வயதுடைய குழந்தையினுடைய வயிற்றில் பூனை ஏறி விளையாடினால் பரவாயில்லை. யானை ஏறி மிதித்தால் என்னவாகும். இந்த நாட்டின் வருவாயில் 20 விழுக்காடு தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, கிராமப் புறச் சாலைகளுக்குத் தான் செலவிடப்படுகிறது. இங்கே, இதிலிருந்து ஒரு கோடி ரூபாய் வருகிறது என்று சொல்கிறார்கள். ஒரு கிலோ மீட்டர் கிராம சாலை போடுவதற்கு ஒரு கோடி. நெடுஞ்சாலை போடுவதற்கு 215 கோடி செலவு செய்கிறார்கள். ஆனால் 48 டன்னுக்கு மேல் போனால் ரோடே கிடையாது. ஆனால் 100 டன் எடுத்துசெல்கிறார்கள். அப்பொழுது சட்ட எங்கே? உச்சநீதிமன்றம் கொடுத்த நிதின் கட்கரி அவர்கள் போக்குவரத்து ஆணையாளர் கொடுத்த போக்குவரத்து ஆணையம் இங்கே உள்ள அதிகாரிகளுக்கு கொடுத்ததெல்லாம் எங்கே?

மேலும் பள்ளிக்கூடங்களுக்கு கணினி வாங்கி கொடுப்பது நல்லது தான். யார் சொன்னது? CSR தொகையில் அதை செய்து தான் ஆக வேண்டும். நாங்கள்நேற்று திருப்பூர் கௌரி சங்கர் ஹோட்டரில் காப்பி சாப்பிட்டோம். 5 சதவீதம் GST வரின்னு சொன்னார்கள். ஒரு காப்பி 28 ரூபாய் என்றால் அதற்கு GST வரி போடுகிறார்கள். இது அவர்கள் செய்ய வேண்டிய கடமை. 2 சதவீதம் CSR தொகை என்பது ஒரு குவாரி உரிமையாளர் செய்ய வேண்டிய கடமை. அவர்கள் லாபம் சம்பாதிக்கிறார்கள். அவர்கள் 10 சதவீதம் பசுமை வரி அறக்கட்டளைக்கும், 2 சதவீதம் CSR தொகையும் கட்ட வேண்டும். அதை அவர்கள் பெரிய சாதனையாக பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆமாம் தினமும் வீட்டிற்கு பொருள் வாங்குவதற்கு 500 ரூபாய் செலவு செய்தோம் என்றால் 500 ரூபாயில் 300 ரூபாய் அரசிற்கு வரியாக செலுத்துகிறோம். 5000 செலவு செய்தால் 3000 கட்டுகிறார்கள். இந்த நிறுவனம் செய்வதெல்லாம் பெரிய விசயமாக பேசிக் கொண்டிருப்பது எந்த விதத்தில் சரியானது என்று நாம் புரிந்து

கொள்ள வேண்டும். எனவே, இந்த சாலைகளுக்கு சாலை பாதுகாப்பு அரண் கொண்டு வர வேண்டும் என்றும் கூறினார்.

நான்கு நாட்களுக்கு முன்னால் திருநெல்வேலியில் ஒரே நாளில் 120 வண்டிகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் பிடிக்கப்பட்டுள்ளது போல் இங்கேயும் பிடியுங்கள். எட்டு வருசத்திற்கு இருக்க வேண்டிய சாலை வெறும் மூன்று மாதம் தான் இருக்கிறது. யார் யாரோ கொள்ளை அடித்து கொளுப்பதற்காக இங்கே இருக்கக் கூடிய மக்களுடைய வரிப்பணம் பாழாகிறது, அதை சரி செய்ய வேண்டும்.

அடுத்ததாக பசுமை அரண். ஏக்கருக்கு 200 மரம் வைக்கப் போகிறோம் என்று சொல்லி, ரேவதி குவாரி 5 1/2 ஏக்கருக்கு 1100 மரம். பிரபாகரன் குவாரி 1 3/4 ஏக்கருக்கு 350 மரம். ராஜசேகர் குவாரி 6 ஏக்கருக்கு 1500 மரம் நடப்போவதாக செல்கிறார்கள். எல்லோரும் சொன்னார்கள் இந்த பகுதிக்கு இக்குவாரிகள் புதிது அல்ல. ஏற்கனவே செய்துபாட்டில் இருந்ததுதான். ஏற்கனவே குவாரிக்கு அனுமதி வாங்கும் போது ஏக்கருக்கு 200 மரம் நட்டு பசுமை அரண் அமைப்போம் என்று சொல்லித்தான் வாங்கி இருக்கிறார்கள். ஒரு குவாரியாவது 200 மரம் வைத்துள்ளார்களா? எந்த மரம் வைக்க வேண்டும்? நாட்டு மரங்களான ஆல், அத்தி, வேம்பு. புங்கன் போன்ற மரங்கள் வைக்க வேண்டும். இவர்கள் சவுக்கு போன்ற வெளிநாட்டில் வளர்கின்ற சீக்கிரமாகவே வளாரும் மரங்களை வைத்துக் கொண்டு சட்டத்தையும், மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே இருக்கிற குவாரிகள் எல்லாம் நான்கு முறை, ஐந்து முறை உரிமம் வாங்கின குவாரி. இவையெல்லாம் பசுமை அரண் அமைத்தருந்தால் ஊத்துக்குளி அருகே தினமும் மழை கொட்டிக் கொண்டே இருக்கும். ஆனால் எல்லாமே பேப்பரில் சர்க்கரை. நடைமுறையில் எங்கே?. இதுதான் கேள்வியாக உள்ளது. எனவே, பசுமையான அரண் அமைப்பதற்கு அரசாங்கம் மக்களின் வரிப்பணத்தை எடுத்து போன வருடத்தில் 2 ½ கோடி மரமும், இந்த வருடம் 7 ½ கோடி மரமும் நட்டு கொண்டு இருக்கிறது. ஆனால் அரசு சொத்தை வைத்து குவாரிக்காரர்கள் வருமானம் ஈட்டக் கூடியவர்கள். ஏனென்றால் நிலம்தான் இவர்களுக்கு சொந்தம். நிலத்திற்கு 3 அடிக்கு கீழே இருக்கும் அனைத்தும் சமூக சொத்து. சமூகச் சொத்தை எடுத்து அவர்கள் தொழில் செய்து லாபம் சம்பாதிக்கிறார்கள். அவர்கள் அரசிடம் செய்ய வேண்டும் என்று சொல்லிய கடமையை செய்யாமல் இருப்பதில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே போல இந்த குவாரிகளில் எல்லாம் கம்பி வேலி போடப்பட்டிருக்கிறது என திட்ட வடிவமைப்பாளர் காட்டினார்கள். கடந்த ஆண்டு மரியாதைக்குரிய தமிழகத்தின் தலைமைச் செயலாளர் திருமதி.சிவ்தாஸ் மீனா கடந்த ஜுலை மாதம்

2023 தமிழ்நாட்டில் உள்ள இயங்கிக் கொண்டுள்ள, இயங்கி முடித்த அனைத்து கற்குவாரிகளிலும் நான்கு முனைப் பகுதிகளிலும் கம்பி வேலி அமைக்க வேண்டும் என்றும், அதை ஆகஸ்ட் மாதத்திற்குள் கிராம நிர்வாக அலுவலர் தொகுத்துக்கொடுத்து, செப்டம்பருக்குள் அமைத்து முடிக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தார். தமிழ்நாட்டில் எப்படி ஆட்சியில் முதலமைச்சர் இருக்கிறாரோ அப்படி அதிகாரியாக இருப்பவர் தலைமை செயலர்.

இங்கே ஒரு வருடம் ஆகியும் பல குவாரிகளில் கம்பி வேலி கிடையாது. இதனால் சென்ற ஆண்டு மட்டும் 350 பேர் இறந்துள்ளதாக கணக்கில் காட்டப்பட்டுள்ளது. எனினும் கணக்கில் வராத ஆடு மாடு என ஏகப்பட்டது உள்ளது. எனவே, இதையெல்லாம் மாவட்ட நிர்வாகம் கவனத்தில் கொண்டு போர்க்கால அடிப்படையில் அனைத்து குவாரிகளுக்கும் கம்பி வேலி அமைப்பதை போன செப்டம்பரிலேயே முடிக்கச் சொன்னார்கள். நாம் இந்த செப்டம்பரில் இதை பேசிக் கொண்டிருக்கிறோம். இதை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். வெடி வைப்பைப் பற்றி அழகாக சொன்னார்கள் திட்ட வடிவமைப்பாளர். இதில் நாணல் வெடி வெடிப்பார்கள். மட்புல் முறையில் வெடிப்பார்கள் மதியம் 1 லிருந்து 2 மணி வரை வெடிப்பார்கள் என்று. எதாச்சும் குவாரி அப்படி இருக்கிறதா? அதுவும் மட்புல் என்றால் எப்படி குவாரியில் வெடி வைக்கும் குழியின் மீது ஈர மண் மூட்டைகளை அடுக்கி அதற்கு மேல் தார்ப்பாய்களைப் போட்டு, அதற்கு மேல் லாரி டயர், டிராக்டர் டயர்களை போட்டு துளி கூட அதிர்வு ஏற்படாமல் வெடி வெடிப்பார்கள். மதியம் 1 முதல் 2 மணி வரை நாணல் வெடி என்றால் கொல்லுப்பட்டாசு போல சத்தத்துடன் வெடிக்காது, 22 நொடிகள் இடைவெளியில் மெல்லிய சத்தத்துடன் வெடிக்கும். இங்கே எங்கேயாவது அப்படி இருக்கிறதா? இங்கே போர் குழியைப் போட்டு சட்ட விரோதமான கம்பரசர் போட்டு தான் வெடிவைக்கிறார்கள். யாராவது 33 மில்லி மீட்டர் அகலம், 1 ½ மீ ஆழம் முறையில் வெடி வைப்பது நடைமுறையில் இருக்கிறது என்று குவாரிக் காரர்கள் சொல்லட்டும். மேலும், முகிலன் எங்களது குவாரியினை மதியம் வந்து பார்வையிடுங்கள் என, கூறுவார்களா? ஏனென்றால் நடைமுறையில் அவ்வாறு இல்லை.

இப்படி இல்லாததால் நேற்று முன்தினம் கோபியில் இரண்டு பேர் இறந்து போனார்கள். மேலும், ஆதியூரிலும், கோடங்கிபாளையத்தில் எஸ்.ஜி. குவாரியிலும் விஜயலட்சுமி குவாரிலும், வெள்ளகோயிலும் நடந்துள்ளது. இப்படி பல குவாரிகளில் இறப்பு நடந்திருக்கிறது. இப்படி சுற்றி சுற்றி பலியாவது கூலிக்காரத் தொழிலாளிகள். இவர்கள் சட்ட அடிப்படையில் செய்கிறோம் என்று கூறி செய்யாததால் செத்துப் போவதெல்லாம் கூலிக்கார்கள். நடைமுறையில் அதெல்லாம் கண்காணிப்பு இல்லாத நிலை இருக்கிறது. எனவே, இந்த குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது.

-65-

மற்ற குவாரிகளில் அதை கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் எனக் கூறினார்.

மேலும், இயங்கி முடித்த குவாரியைப் பொறுத்தவரை தண்ணீர் எடுப்பதென்பது அதற்கு தலைமைச் செயலாளர் மட்டுமே அனுமதி கொடுக்க முடியுமே, தவிர மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுமதி கொடுக்க முடியாது. குவாரிக்கு அனுமதி கேட்கும் போது, இந்த அனுமதி முடிந்தவுடன் குளம்போல் தண்ணீரைத் தேக்கி வைத்து, இங்கே நிலத்தடி நீரைப் பெருக்குவோம் என்று திட்டத்தில் சொல்லித்தான் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால், இந்த தண்ணீரை எடுத்து எம். சாண்ட், கிரசர் ஆகியவற்றிற்கு பயன்படுத்திக் கொண்டு சட்ட விரோதமாக செயல்பட்டு வருகிறார்கள். ஏற்கனவே நாங்கள் பல பிரச்சனைகள் செய்து, சுக்கம்பாளையம், கோடங்கிபாளையம் மற்றும் காங்கயத்தில் எல்லாம் அந்த குவாரியின் இணைப்பை எல்லாம் வெட்டியெடுத்துள்ளார்கள். இது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனவே தண்ணீர் எடுக்காதவாறு மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திட்ட வடிவமைப்பாளர் அழகாகச் சொன்னார்கள் தொழிலாளர் நலன். தொழிலாளர்களுக்கு ESI, PF மற்றும் காப்பீடு ஆகியன பெற்றுதருவோம் என்று சொன்னார். நாங்கள் ஒரே ஒரு கேள்வி தான் கேட்கிறோம், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இங்கே அனுமதி கேட்கக் கூடிய பிரபாகரன் குவாரி உரிமையாளருடைய தகப்பனார் மரியாதைக்குரிய உதயகுமார் அவர்கள். அவருடைய குவாரியில் ஒரு லாரி கவிழ்ந்தது. பாதிக்கப்பட்ட தொழிலாளி நாகராஜன் சாலையில் செல்லும் போது இறந்ததாக சொல்லி, அவரது மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது. இதை மாவட்ட நிர்வாகத்திடமும், முதலமைச்சரிடமும் கூறினோம். இவ்வாறு நடக்கக் கூடிய இறப்பையே வேறு இடத்தில் நடந்ததாக காட்டித்தான் செய்கிறார்கள். அதில் இறந்தவர்களுக்கு இழப்பீடு என்பது இல்லாத நிலை உள்ளது. இப்பொழுது கோபியில் இறந்தவர்களுக்கு ரூ. 3 லட்சம் அரசு கொடுத்துள்ளது. நாங்கள் போராடி கரூர் என்.டி.சி. குவாரியில் உள்ளே இறந்தவர்களுக்கு 24 லட்ச ரூபாய் வாங்கிக் கொடுத்துள்ளோம். இதற்கான ஆதாரம் இருக்கிறது. ஏன் தொழிலாளிக்கு பேரம் பேச வேண்டும். அவர்களுக்கென ESI, PF மற்றும் காப்பீடு என்று இருந்திருந்தால் தானாகவே வந்துவிடும். ஆனால் இதையெல்லாம் நாங்கள் போய் தொழிலாளர் நல அலுவலகத்தில் கேட்ட போது, எந்தவொரு தொழிலாளருக்கும் அது இல்லை. அரசாங்கத்திடம் இதையெல்லாம் கொடுங்கள் என்று நாங்களும் சண்டையிடுகிறோம். அது இருந்தது என்றால்

தானாகவே எல்லாம் வந்துவிடும். தொழிலாளர் நலன் பற்றி பேசினார்கள். ஏன் இந்த குவாரிக்காரர் அப்படி செய்தார் என கேளுங்கள். அது தானே சரியானதாக இருக்கும்.

எனவே, சட்டத்தின் ஆட்சி இங்கு நடக்க வேண்டும். சட்டப்படியான நிலை நடக்க வேண்டும். கடந்த வாரம் ADSP–யை சந்தித்த போது அவர்கள் சொல்கிறார்கள். ஊத்துக்குளி பகுதியில் இருக்கக் கூடிய காவல் நிலையம் முழுக்க முழுக்க குவாரி உரிமையாளருக்கு உடந்தையாக இருக்கிறார்கள். எந்த உண்மையான அறிக்கையும் கொடுக்க மறுக்கிறார்கள். இது குறித்து மாவட்ட ஆட்சியரிடமும், சார் ஆட்சியரிடமும் சொல்லி இருக்கிறோம். தயவு செய்து, இங்கு சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்துங்கள். புகார்கொடுத்தாலும் நடவடிக்கை இல்லை. விதிமீறல் இருந்தாலும் நடவடிக்கை இல்லை என்ற நிலை இருக்கிறது. பல சட்டத்தை மீறி நடந்து கொண்டிருப்பதால் ஆதாரத்துடன் கொடுத்துள்ளோம். இதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல இங்கு தொடர்ந்து, கருத்துக் கேட்புக் கூட்டத்தில் இவ்வளவு ஆவணத்துடன் சொல்கிறோம். மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுமம் ஏக்கருக்கு 1 ½ முதல் 5 லட்சம் வாங்கிக் கொண்டு அனுமதி கொடுத்து விடுகிறது என கற்குவாரி அசோசியேசன் தலைவரே தொலைக்காட்சியில் நேரடியாக பேட்டி கொடுத்துள்ளார்கள். எனவே, SEIAA–வின் மீது அங்கிருக்கும் சிறப்பு நிபுணர் குழு (Expert panel) மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வருகிற 19.09.2024 அன்று தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து இயக்கங்களும் மாநில சுற்றுச் சூழல் மதிப்பீட்டு குழுமம் முன்பு தொடர் காத்திருப்பு போராட்டம் அறிவித்துள்ளோம். இந்த ஆவணங்களும் SEIAA –க்குதான் போகிறது. மரியாதைக்குரிய SEIAA–வின் தலைவர் மற்றும் உறுப்பினர் செயலர் ஆகியோரை நேரில் பல முறை பார்த்து நாங்கள் முறையாக கொடுத்தும், நீங்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கே மாற்றம் செய்து விடுகிறீர்கள். உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அதிகாரம் இருப்பவர் செய்ய வேண்டியதைச் செய்யாமல் நீங்கள் காசை வாங்கிக் கொண்டு செய்கிறீர்கள் என நேரடியாக குற்றம் சாட்டுகிறோம். எங்கள் மீது அவதூறு வழக்கை போடுங்கள். மாவட்ட ஆட்சித் தலைவரை நடவடிக்கை எடுக்கச் சொல்வது சட்டப்படி சரியானது அல்ல. எனவே, உங்கள் அலுவலகத்தை முற்றுகை இடும் போராட்டத்தை அறிவித்திருக்கிறோம் என்று அதையும் இந்த கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே, இங்கு மொரட்டுப்பாளைம் கிராமத்தில் புதியதாக ஏற்கனவே இயங்கி, அனுமதி முடிந்து புதியதாக அனுமதி கேட்டுள்ள ரேவதி, பிரபாகரன் மற்றும் ராஜசேகர் கற்குவாரிகள் சைட் க்ரிட்டீரியா என்று சொல்லக்கூடிய வீடு, வீட்டு மனைகள், ஓடை ராஜசேகர் குவாரியில் ஓடையும் இருக்கிறது மேற்குப் புறத்தில் 205–ல் ஓடை இருக்கிறது. இப்படி மேல்நிலைத் தொட்டி, நீரேற்றும் நிலையங்கள் தற்காலிக

குடியிருப்பு, நிரந்தரக் குடியிருப்பு என பல இருப்பதால், இந்த மூன்று கற்குவாரிகளுக்கும் சட்ட அடிப்படையில் அனுமதி கொடுக்கக் கூடாது. கொடுக்க முடியாது. அப்படிக் கொடுத்தாலும் பணத்தைக் கொடுத்து செய்தாலும், நாளை அது மூடப்பட வேண்டிய நிலை ஏற்படும் என்பதை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். நீங்கள் சட்ட விதிங்களின் படி குவாரி நடத்தினால் நாங்கள் ஒரு வார்த்தை கூட பேச முடியாது. ஆனால் அவ்வாறு இல்லாததால் நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம் எனக்கூறினார்.

மேலும். இந்த மாவட்டத்தில் போன வாரம் 26ம் தேதி நில அதிர்வு மூன்றாவது முறையாக ஏற்பட்டது. இந்த நில அதிர்வை பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேசிக் கொண்டிருந்தோம். அதற்கு மாவட்ட ஆட்சியர் நாங்கள் சேலத்தில் உள்ள நிலஅதிர்வு பதிவு மையத்திற்கு சென்று பார்த்ததில் நில அதிர்தற்கான பதிவு ஏதும் இல்லை என்று கூறினார்.ஆனால் நில அதிர்வுக்கு வீடு அதிர்ந்தது எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். அது விடியோ, சிசிடிவியிலும் பதிவாகி உள்ளதை மாவட்ட ஆட்சியரிடம் காட்டினோம் எனத்தெரிவித்தார்.

இங்கே பொறுத்தவரைக்கும் சுனாமி மற்றும் பெருவெள்ளம் போன்ற எந்த இயற்கை பேரிடர் வந்தாலும் அதை கண்காணிப்பதற்கான பதிவு கருவிகள் கிடையாது. ஆனால் அழிவது மக்கள். ஏற்கனவே நம் மாவட்டத்தில் 2022, 2023, 2024 என மூன்று முறை நில அதிவு வந்து விட்டது. எனவே அதிகாரிகளாகிய நீங்கள் மண்ணைப் பாதுகாத்துக் கொடுங்கள். வயநாடு போல் இருக்கின்ற காலத்தில் தவறான குவாரிக்கு அனுமதி கொடுத்துவிட்டு எதிர்கால தலைமுறையை அழித்துவிட்டு சென்று விடாதீர்கள் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன் எனக்கூறினார்.

**18. திரு. ஆறுமுகம், மொரட்டுப்பாளையம்**

எல்லோரும் தங்கள் கருத்துக்களை சொல்லிட்டார்கள் சரி. இந்த மொரட்டுப்பாளையம் குவாரிகள் எதுவும் ஓட வேண்டாம் என ஒரு சிலர் சொல்லிவிட்டார்கள். அவ்வாறு ஓட்டாமல் விட்டு விட்டால். மொரட்டுப்பாளையத்திற்கு வருமானத்திற்கு என்ன வழி? அதை பற்றி அதிகாரிகள் எங்களுக்கு விளக்க வேண்டும். மொரட்டுப்பாளையமே இதைத்தான் நம்பி இருக்கிறது. இங்கு இத்தொழிலை அதிகமானோர் கைத்தொழில் மாதிரி செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற சூழ்நிலையில் எல்லோரும் சொல்லும் போது அது தானாகவே நின்று போய்விடும். நின்று போகும் போது சிறு உரிமையாளர்கள் எந்தத் தொழிலை செய்வது. அதற்கு அதிகாரிகள் எங்களுக்கு ஒரு வழி செய்து கொடுங்கள். ஏனென்றால் நிறுத்துகிற முடிவினை அவர்கள் சொல்லும்

போது எங்களுக்கு வேறு வழி இல்லை, வாழ்வாதாரம் வேண்டும். இதற்கு ஏதாவது வழி ஒன்று செய்து கொடுங்கள்.

வருடம் ஒன்றிற்கு 4 கோடி, 5 கோடி ரூபாய் வருவாய் பஞ்சாயத்திற்கு வந்து கொண்டு இருக்கிறது. வருமானம் எதுவும் இல்லையெனில். பஞ்சாயத்திலிருந்து எதுவும் செய்ய முடியாது. அப்பொழுது பொதுமக்கள் வாழ்வதற்கு என்னவழி? சின்ன பிரச்சனை என்றால் கூட பஞ்சாயத்தில் வருமானம் இல்லை என்று சொல்லிவிடுவார்கள். அப்பொழுது நாங்கள் ஊரை விட்டுப் போவதா? என்ன என்பதை அதிகாரிகள்தான் எங்களுக்கு வழிகாட்டிக் கொடுக்க வேண்டும். நாங்கள் வந்து எதையும் சொல்லவில்லை. எங்களுக்குத் தேவை பஞ்சாயத்திற்கு வருமானம் வரவேண்டும். வருமானத்திற்கு என்ன வழி என்று அதிகாரிகள் வந்து ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். இல்லையென்றால் நாங்கள் ஊரைக் காலி செய்துவிட்டு போவதைத் தவிர வேறுவழி இல்லை. அதனால் எங்களுக்கு ஒரு நல்ல அமைப்பு அதிகாரிகள் வந்து செய்து கொடுத்தால் மட்டும்தான் ஏனென்றால் கிட்டத்தட்ட கால்வாசி பேர் ஊரை விட்டு சென்றுவிட்டார்கள்.

மீதி இருக்கிற கொஞ்சம் பேரும் போனால் வேறு என்ன செய்யமுடியும். பிழைப்பதற்கு வழி இல்லை. அப்பொழுது நாங்கள் ஊரைவிட்டு போவதை தவிர வேறுவழி இல்லை. அந்த சூழ்நிலை வருவதற்கு முன்னால் எங்கள் பஞ்சாயத்திற்கு வருமானம் வரவேண்டும். வருவதற்கு உண்டான வழியை அதிகாரிகள் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

**19. திரு. சிவசாமி, சிவன்மலை, விவசாயபாதுகாப்பு செயலாளர், காங்கயம் ஒன்றிய செயலாளர்.**

கல் குவாரி என்பது தேவைதான். ஆனால் தேவை என்பதை விட தேவை இல்லை என்பதே அதிகமாக உள்ளது. முதலில் ஆசை இருந்தது இப்பொழுது பேராசையாக மாறி இருக்கிறது. அதிகமாக வெடிவைப்பதால் நில அதிர்வுக்கு முக்கிய காரணமாக உள்ளது. இரண்டாவது பார்த்தீர்கள் என்றால் சுற்றுச்சூழல் பாதுகாப்பதற்கு எதுவும் இல்லை. சுற்றுச்சூழல் பொறியாளர் எல்லாக் குவாரிகளுக்கும் சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டும். பல வருடமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இனிமேல் புதிதாக வேறு கேட்கிறார்கள். வருடம் 200 மரம், 300 மரம் என்று அனுமதி கொடுக்கிறீர்கள் ஒரு மரத்தை காட்டுங்கள். பறவை நட்ட மரம் இல்லாமல் அவர்கள் நட்ட ஒரு மரத்தை காட்டுங்கள். அழிவின் விளிம்பில் இருக்கிறோம். தற்பொழுது தண்ணீர் பாட்டில்தான் கையில் கொண்டு செல்கிறோம். அடுத்தது ஆக்ஜிசன் சிலிண்டரை நமது குழந்தைகள் கண்டிப்பாக தோலில் போட்டுக் கொண்டு செல்வார்கள். பார்த்து செய்யுங்கள் எனக் கூறினார்.

**20.திரு. சதீஸ், தமிழக விவசாய பாதுகாப்பு சங்கத்தின் சட்ட அமைப்பாளர், மாநில செயலாளர். ஊழல் ஒழிப்பு மற்றும் சட்ட பாதுகாப்பு குழுவின் ஒருங்கிணைப்பாளர், பெருமாநல்லூர்**

நாம் தொடர்ந்து இந்த கற்குவாரியினுடைய செயல்பாடுகளைப் பற்றி ஆழமாக ஆய்வு செய்து, தொடர்ந்து ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அதன் தொடர்பாக சட்ட விரோத கற்குவாரிகளுடைய செயல்பாடுகளை குறித்து 30 பக்க அறிக்கையாகவே வெளியிட்டுள்ளோம். அந்த அறிக்கையில் என்னென்ன விதிகள் எல்லாம் மீறி இருக்கிறார்கள், எப்படி எல்லாம் செயல்படுகிறார்கள் என்று நாங்கள் சொல்லியுள்ளோம். அதையும் தாண்டி, இந்த மொரட்டுப்பாளையத்திற்கு ஒரு வரலாறே உள்ளது. இவர்கள் யாரும் இதைப் பற்றி சொல்லவில்லை. உச்ச நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய நீதிபதி மகாதேவன் அவர்கள் கொடுத்த வழக்கு உத்தரவு இருக்கிறது. ரிட்மனு எண். 2619/2021. இதில் பல்வேறு விபரங்ளை ஏற்கனவே கற்குவாரியினுடைய 64 குவாரிகளுக்கு மேல் இயங்கப்பட்ட, இப்பொழுது அனுதிக்கு வந்ததில் கூட அது தொடர்பான குவாரி இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். இப்ப அந்த மாதிரி உத்தரவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், இந்த கருத்துக்கேட்புக் கூட்டத்தின் மூலமாக SEIAA விற்கும், அந்த தொழில்நுட்ப குழுவிற்கும் நாங்கள் சொல்கிறோம். விதிகளுக்கு உட்பட்டு செயல்படுவது என்றால் நமக்கும், நம்மைச் சுற்றி குடியிருப்பவர்களுக்காகத்தான். இப்பொழுது அண்ணன் கூட சொன்னார்கள் கற்குவாரி வேண்டும். கற்குவாரி இல்லாமல் என்ன செய்வது என்று. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடிமக்களும் கற்குவாரியை வைத்துத்தான் பிழைத்துக் கொண்டிருக்கிறார்களா? கற்குவாரி தொழில் எத்தனை பேருக்காக இருக்கிறது. இப்பொழுது மணலுக்கு பதிலாக எம்.சாண்டு, பி.சாண்ட் கொண்டு வந்ததில் இருந்து பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட்டு முக்கிய உற்பத்தி பொருளாக கற்குவாரி மாறியதால் பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட்டு கிட்டதட்ட ஆயிரம்பேர் பாதிக்கப்பட்ட இடத்தில் பத்தாயிரம் பேர் மற்றும் இருபதாயிரம் பேர் பாதிக்கப்படுகிறோம். அதாவது 10 அடி, 20 அடி ஆழத்தில் கற்குவாரியில் கல் எடுத்தார்கள் என்றால் பெரிதாக பாதிப்பு இருக்காது. மிகவும் அதிக ஆழத்திற்கு போகும் போது பிரச்சனையாகிக் கொண்டு இருக்கிறது. இங்கே 37 மீட்டருக்கெல்லாம் கொடுக்கிறார்கள். 37 மீட்டர் என்றால் 120 அடிக்கு மேல் உள்ள ஆழமாகும். புவியியலில் மேல்தட்டுப்பாறை என்றால் பேரண்ட்ராக் அதாவது கோயமுத்தூர் பிளேட் என்று சொல்வார்கள். இதில் பாதிப்பு ஏற்பட்டது என்றால் எல்லாப் பக்கமும் அதிரும். சென்றவாரம் தாராபுரம், காங்கயம், பல்லடம் இந்த பகுதிகளில் எல்லாம் அதிர்வு ஏற்பட்டு உணரப்பட்டது.

இதெல்லாம் எங்கேயோ யாரோ ஒருத்தர் வெடி மருந்து அதிகப்படியாக வைத்து அதிர்வு ஏற்பட்டதினால்தான் இந்த பாதிப்பு உணரப்பட்டது. அதனால்தான் நாங்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் விதிகளுக்கு உட்பட்டு செயல்படுங்கள் என்று. மேலும், கற்குவாரி அனுமதி வாங்கும் போது அந்த திட்ட அலோசகர், ஜியோ எக்ஸ்பொளரேசன் மற்றும் மைனிங் சொல்யுசன்ஸ் அவர்கள் சொன்ன திட்ட அறிக்கையில் என்ன இருக்கிறது என்று கற்குவாரி உரிமையாளரிடம் கொடுத்து அவரை படித்து பார்க்க சொன்னால் அது என்னவென்று தெரியுமா? என்று பாருங்கள். திட்ட வடிவமைப்பாளர் சொன்ன விசயம் எல்லாம் இவர்களுக்கு தெரியுமா? என கேட்டுப் பாருங்கள் அவர்களுக்கு தெரியாது.

அப்பொழுது ஒரு திட்டத்தைப் பற்றிய, ஒரு சட்டத்தைப் பற்றிய விசயம் கற்குவாரி உரிமையாளருக்கோ அதை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கோ தெரியாது. எந்த கற்குவாரியிலுமே ESI, PF பின்பற்றுவதே இல்லை. இதற்கெல்லாம் DGMS விதி என்று சொல்வார்கள். இந்த விதியில்தான் வெடிவைப்பது பற்றியும், பணியாளர்களுக்கான பாதுகாப்பெல்லாம் இருக்கும். பணியாளர்களுக்கான பாதுகாப்பு உடை, வெடி முறைப்படித்தான் வைக்க வேண்டும். காலையிலிருந்து மாலை வரைக்கும்தான் செய்யணும். இந்த மாதிரி எல்லாம் அதில் இருக்கும். ஆனால் காலையில் முன்னதாகவே 3 மணி, 4 மணிக்கெல்லாம் வைத்து விடிய விடிய கற்குவாரியை இயக்கி, ஒரே நம்பர் பிளேட்டை வைத்து பல லாரிகளுக்கு ஒட்டி பல்வேறு பிரச்சனைகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

அப்புறம் அனுமதிக்கப்பட்ட அளவை விட கடுமையாக எடுத்து எடுத்து இப்ப பிரச்சனை. இப்பொழுது கிணறு எல்லாம் நம்மிடம் எவ்வளவு இருக்கிறது? கிணறு 40 அடி, 50, அடி, 60 அடி ஆழத்தில் நாம் வந்து அதிக ஆழத்தில் செல்லும் போது தண்ணீர் எல்லாம் வற்றி கடுமையான பிரச்சனைகள் எல்லாம் வருகிறது. சட்டப்படி இருக்கக் கூடிய விதிகளுக்கு உட்பட்டு க்ரிட்டீரியாவை மீறாமல் கற்குவாரிக்கு அனுமதி கொடுங்கள். க்ரிட்டீரியாவை மீறி ஏற்கனவே 1959 தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளை மீறி வீடுகள் இருக்கக்கூடிய ஓடைகள் இருக்கக்கூடிய, உயர்மட்ட குடிநீர் இருக்கக்கூடிய போன்ற பல்வேறு விதிகளை மீறி இருக்கும்போது தொழில்நுட்ப குழுவால் சரியாக அனுமதி கொடுக்க முடியாது. விதிகளை மீறி இங்கு உள்ள யாரும் கருத்துக்கேட்பை தாண்டி அனுமதி கொடுக்க முடியாது என தெரிவித்தார்.

**முடிவுரை**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு, திருப்பூர் வடக்கு அவர்கள் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எழுத்துபூர்வமான

மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர், திருப்பூர் அவர்களிடம் கொடுக்குமாறு தெரிவித்துக்கொண்டு இத்துடன் இந்த கருத்துகேட்பு கூட்டம் முடிவு பெற்றதாக அறிவித்தார்.

மேலும், கூட்டுக்கல் சுரங்கங்களின் (3 எண்ணிக்கையில்) உத்தேசிக்கப்பட்டுள்ள கல்குவாரி அமைத்தல் தொடர்பாக பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தின் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 16 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுக்கல் சுரங்கங்களின் (3 எண்ணிக்கையில்) உத்தேசிக்கப்பட்டுள்ள கல்குவாரி அமைத்தல் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து மின்னஞ்சல் மூலமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு, திருப்பூர் வடக்கு அலுவலகத்தில் பெறப்பட்ட 3 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பங்கேற்றோர் பட்டியல், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, காணொளி, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய செருகு பதிவி ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருப்பூர் வடக்கு.**

**மாவட்ட வருவாய் அலுவலர்,**
**திருப்பூர் மாவட்டம்.**

**இணைப்பு**

1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகைப் பதிவேடு.
2. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் நடவடிக்கைகளைப் பதிவு செய்த வீடியோ குறுந்தகடுகள்.
3. பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் – 16 எண்கள்.
4. மின்னஞ்சல் மூலமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு, திருப்பூர் வடக்கு அலுவலகத்தில் பெறப்பட்ட மனுக்கள் – 3 எண்கள்.